ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1808 - 2013 අප්‍රේල් මස 26 වැනි සිකුරාදා - 2013.04.26
*1808 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 540 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 548 |


**கவனிக்க.**- (i) சுங்கம் (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) முஸ்லிம் திருமண மணநீக்கம் (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, மே மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மே மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**விலைமதிப்புத் திணைக்களம்**

19.04.2013 ஆந் திகதிய 1807 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) - "விளம்பரங்கள்" இல் பதவிகள்-வெற்றிடம் இன்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட தலையங்கத்தின்கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள 4-651 ஆம் இலக்க அறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப் படிவம் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை.

அம்மாதிரி விண்ணப்பப்படிவம் பின்வருமாறு பிரசுரிக்கப்படல் வேண்டும்.

ஆர். ஏ. ஆர். எம். என். ராஜகருண,
அரச பிரதம விலைமதிப்பாளர்.

விலைமதிப்புத் திணைக்களம்,
இல. 748, மருதானை வீதி,
கொழும்பு 10.

மாதிரி விண்ணப்பப்படிவம்
(விண்ணப்பப் படிவத்தை பின்வருமாறு தயார் செய்து கொள்ளல் வேண்டும்)

**விலை மதிப்புத் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்**

1. விண்ணப்பதாரரின் பெயர் :-
   1.1 முதலெழுத்துக்களுடனான பெயர் - (ஆங்கில கெப்பிரல் எழுத்தில்) :----.
   1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிரல் எழுத்தில்) :----.
   1.3 முழுப் பெயர் (சிங்களம்/ தமிழில்) :----.

2. சொந்த முகவரி : (சிங்களம்/ தமிழில்) :----.
(முகவரி மாற்றமடைந்தால் அது பற்றி உடனடியாக அறியத்தர வேண்டும்).

3. நேர்முகப் பரீட்சைக்கு அழைப்புக் கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிரல் எழுத்தில்) :----.
(சிங்களம் / தமிழில்) :----.

4. பால் : ஆண்
(ஆண் - 1, பெண் - 2) பெண்

5. நீங்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் மற்றும் ஆங்கிலம் 1
தமிழ் மற்றும் ஆங்கிலம் 2

6. நீங்கள் இலங்கைப் பிரசையா என்பது :----.

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

8. பிறந்த திகதி

வருடம் : மாதம் : திகதி :

   8.1 விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்ற இறுதித் திகதிக்கு வயது :

வருடம் : மாதம் : நாள் :

9. (i) தொழில்சார் மற்றும் ஏனைய தகைமைகள் :----.
   (ii) இரண்டாம் மொழி தொடர்பாக பெற்றுள்ள உச்ச தகைமை : ----.
   (iii) முதலாவது மொழி தொடர்பாக பெற்றுள்ள உச்ச தகைமை : ----.
   (iv) (1) பட்டத் தகைமை :

| பட்டம் | பாடங்கள் | தேர்ச்சி (வகுப்பு) | வருடம் | பல்கலைக் கழகம் |
|---|---|---|---|---|
| | | | | |

(2) பட்டப் பின் படிப்பு :

| பட்டப் பின் படிப்பின் பெயர் | பட்டம் வழங்கப் பட்ட வருடம் | பல்கலைக்கழகம் |
|---|---|---|
| | | |

   (v) சட்டத்தரணித் தொழிலில் பெற்றுள்ள அனுபவம் :----.

10. நீதிமன்றமொன்றில் நீங்கள் யாதாயினுமொரு தவறுக்கு தவறாளியாக்கப்பட்டுள்ளீர்களா? ஆம் / இல்லை
ஆமெனில் அது பற்றிய விபரம் :----.

11. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இந்த விண்ணப்படிவத்தில் நான் குறிப்பிட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் வினயமாகவும், மதிப்புடன் வெளிப் படுத்துகின்றேன்.

(ஆ) நான் குறிப்பிட்டுள்ள விடயம் உண்மைக்கு முரணானதென்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில், நான் மேற்படி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கு தகுதியற்றவராவதற்கும், இந்தப் பதவிக்கு நான் நியமனம் செய்யப்பட்ட பின்னர் அவ்வாறு உறுதி செய்யப்படும் பட்சத்தில் பதவிநீக்கம் செய்யப்படுவதற்கும் உட்படுவேன் என்பதை அறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

12. (1) **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதி செய்தல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி .................................................. (முழுப் பெயர்) ஐ நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், அவர் 2012 ..................... மாதம் ............ ஆந் திகதி தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் இட்டார் என்பதையும் நான் உறுதி செய்கின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதி செய்யும்
அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதி செய்யும் அலுவலரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

*2. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :***

விண்ணப்பதாரர் மேலே குறிப்பிட்டுள்ள விபரங்களை பரிசீலனை செய்தேன் என்றும், அவை சரியானவை என்றும், அவரின் வேலைகள், வருகை மற்றும் நடத்தை, திருப்திகரமானவை என்றும் நான் சான்றுபடுத்துகின்றேன். அவர் இந்த நேர்முகப் பரீட்சையின் மூலம் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுவாராயின், சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியும் / முடியாது.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
திகதி :----.

*4-856*

---

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

உதவிப் பொலிஸ் பரிசோதகர் பதவி

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் உதவிப் பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "உதவிப் பொலிஸ் பரிசோதகர் பதவி" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 26.05.2013 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது, என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 1,90,200 - 7 X 2,160 - 2 X 2,880- 8 X 3,840 - 17 X 4,500 - ரூபா 3,18,300.

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும் :-

(அ) கடினக் கடமைக் கொடுப்பனவுகள்.- ரூபா 2,000 ;

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 12,000 ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 9,600.

(இ) வேறு கொடுப்பனவுகள் :

(1) சீருடையை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;
(2) சீருடைக் கொடுப்பனவு ரூபா 200 ;
(3) ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 1,500 ;
(4) அடிப்படை சம்பளத்தில் 25% ஊக்கப்படுத்தல் கொடுப்பனவு.

(அ) இலவச பயண வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலை களுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வ தற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

(ஊ) தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் சிவில் உடையணிந்து சேவை செய்ய வேண்டும். அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சிகளுக்காகவும் தயார் நிலையில் இருக்க வேண்டும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை :

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள் :

* க. பொ. த. (சா.தர) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றுள்ளதுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்.

* க. பொ. த. (உ. தர) பரீட்சையில் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**.- க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப்பரீட்சையில் சித்தியடைந் திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராக கருதப்படுவார்.

**குறிப்பு 3**.- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) உடற் தகைமைகள் :

உயரம் : 5 அடி 6 அங். (ஆகக் குறைந்தது)
மார்பு : 32 அங். ஆகக் குறைந்தது (மூச்சுவிட்ட நிலையில்)

**குறிப்பு 1**.- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி

இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் உடற் தகைமைகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் தற்றுணுவின்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை :

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்து வில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) பிற தகைமைகள் :

விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்பு முறை**.- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்தகுதிப் பரீட்சையில் அல்லது மனோவலிமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

1000 மீற்றர் - 3 நிமிடங்கள் 14 விநாடிகள்.

* உடற்தகுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரமே இறுதி எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) ***எழுத்து பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :***

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு கட்டுரை பற்றிய வினாத்தாள் எழுதுதல் ;
* பொது அறிவும்பொது நுண்ணறிவும் (01மணித்தியாலம்.)

6. **மருத்துவப் பரீட்சை**.- ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் மருத்துவப் பரிசோதனைக்கு தோற்ற வேண்டும். பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் கிட்டிய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரச கரும மொழித் தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல் :**

* பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு, மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சிபெறல் வேண்டும்.

* 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

* நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்கள் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் பிற்போடப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்கள்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) பொலிஸ் மா அதிபரின் அனுமதி இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானி-பகுதி II இன் பிரகாரமும் 1952/2006 என்ற இலக்கமும் 2006.10.19 ஆந் திகதிய சுற்றுநிருபம் மற்றும் 2007.08.09 ஆந் திகதிய பொலிஸ்மா அதிபரின் சுற்றுநிருபத்தின் (திருத்தப்பட்டது) பிரகாரமும் பொலிஸ்மா அதிபரின் அனுமதியுடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும் சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து

ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக்கொள்வதானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் 1 ஆம் தொகுதியின் 5 ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை 1693/2003 இன் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதியுரை/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஏ) தகுதிகூர் உதவிப் பொலிஸ் பரிசோதகர் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஒ) தகுதிகூர்நிலை உதவிப் பொலிஸ் பரிசோதகர் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி II (அ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது ஏனைய புறக்கிருத்தி செயற்பாடுகள் பற்றிய சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11'' x 8'' அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத்தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் பதவி
(அரச புலனாய்வுப் பணியகம்)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழ்களில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பதாரரின் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
(பிரதியை இணைக்கவும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் மாவட்டம் :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :----.
பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (இருப்பின்) :-----, கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருபவர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நடுவர்களின் பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையின் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் அல்லது பொலிஸ் உப சேவையில் சேவை செய்துள்ளீரா ? ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக? :-----.

16. நீங்கள் தற்போது பொலிஸ் உப சேவையில் சேவை செய்கிறீர்களா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை, இலக்கம் என்பவற்றைத் தருக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக :-----.

17. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்) :-----.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் இருந்துள்ளீர்களா ? (அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும்) :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்) :-----.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) : -----.

19. நீங்கள் ஏதாவது தவறு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? (அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப்பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

21. **திணைக்கள தலைவரின் சான்றிதழ்** (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ................................ அவர்கள் இத்திணைக்களத்தில்/கூட்டுத் தாபனத்தில்/சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்கள தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

4-672/1

---

## இலங்கை பொலிஸ் திணைக்களம்

பொலிஸ் கொஸ்தாபல் பதவி (அரச புலனாய்வுப் பணியகம்)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் ''பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுனர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை,

கொழும்பு 06'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பொலிஸ் கொஸ்தாபல் (அரச புலனாய்வுப் பணியகம்)" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2013.06.25 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும். தாமதித்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் பொலிஸ் திணைக்களத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

**3. சம்பள அளவுத்திட்டம்.**- ரூபா 1,71,360 - 7 x 1,740 - 10 x 2,160- 17 x 2,880 - ரூபா2,54,100.

மேற்கூறப்பட்ட சம்பள அளவுத் திட்டத்திற்கு மேலதிகமாக கீழ்க்காணும் கொடுப்பனவுகள் மாதந்தோறும் வழங்கப்படும் :-

(அ) கடினக் கடமைக் கொடுப்பனவுகள்.- ரூபா 2,000 ;

(ஆ) இணைந்த கொடுப்பனவுகள் :

(1) வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 10,500 ;
(2) ஏனைய பிரதேசங்களில் சேவையின் பொருட்டு ரூபா 8,400.

(இ) வேறு கொடுப்பனவுகள் :

(1) சீருடை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;
(2) சீருடைக் கொடுப்பனவு ரூபா 200 ;
(3) ஊக்குவிப்புக் கொடுப்பனவு ரூபா 1,500 ;
(4) அடிப்படைச் சம்பளத்தில் 25% ஊக்கப்படுத்தல் கொடுப்பனவு

(அ) இலவச பயண வசதி ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய வசதிகள் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்ள உதவிகள் வழங்கப்படும் ;

(உ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகள் கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) வயதெல்லை :

வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-28 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் சேவை செய்யும் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்களுக்கும் (SA) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 30 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்வித் தகைமைகள் :

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம்/தாய்மொழி உட்பட இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் குறைந்தது 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இரண்டு தடவைகள் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகள் முதலாவது தடவையில் ஒரே முறையில் 5 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1.**- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.**- க.பொ. த. (சா.த.) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்ப பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல் முறைப்பரீட்சையில் சித்தியடைந் திருந்தபோதும் அப்பாடத்தில் சித்தியடையாததாக கருதப்படும்.

**குறிப்பு 3.**- விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. த.) பாடத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்பட மாட்டாது.

(இ) பௌதிகத் தகைமைகள் :

உயரம் : 5 அடி 4 அங். (ஆகக் குறைந்தது)
மார்பு : 30 அங். ஆகக் குறைந்தது (மூச்சுவிட்ட நிலையில்)

**குறிப்பு.**- சிறந்த விளையாட்டுத் திறமையுடைய தேசிய மட்டத்தில் விளையாட்டுப் போட்டிகளில் திறமை காட்டியுள்ள அல்லது சர்வதேச போட்டிகளில் பங்குபற்றி இலங்கைக்கு புகழ் ஈட்டித்தந்துள்ள விண்ணப்பதாரர் ஒருவரின் பௌதிகத் தகைமைகள் குறைவாக இருப்பினும் அவர் பிற தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனைப்படி தகைமை பெறுவர்.

(ஈ) பார்வை தொடர்பான தேவை :

ஒவ்வொரு கண்ணிலும் பார்வை 6/12 க்கு குறைவாக இருத்தலாகாது. ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் மூக்குக் கண்ணாடி அல்லது பொருத்துவில்லைகள் பாவிப்பவராயின் தகைமை அற்றவராவார்.

(உ) பிற தகைமைகள் :

விண்ணப்பதாரர் திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விவாகமானவர்களாகக் கருதப்படுவர்.) ஏற்கனவே பொலிஸ் திணைக்களத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இது ஏற்புடையதாகாது.

**5. ஆட்சேர்ப்பு முறை.**- தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்பத் தகைமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும். அதில்

சித்தியடைந்தவர்கள் மாத்திரம் பின்வரும் உடற்பயிற்சிகளில் பங்குபற்றலாம். அதாவது மனோவலிமைப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.-

1000 மீற்றர் - 3 நிமிடங்கள் 44 விநாடிகள்.

பௌதிகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மாத்திரம் இறுதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையில் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகள் எடுப்பவர்கள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

(i) ***எழுத்து பரீட்சை.- எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. அவை :***

* 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக எழுதுதல் ;
* பொது அறிவும் பொது நுட்பமும் (01 மணித்தியாலம்.)

6. **வைத்தியப் பரிசோதனை**.- ஆகக்கூடிய புள்ளிகளையும் ஏனைய திறமைகளையும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் தமது நியமனத்திற்கு முன்னர் வைத்தியப் பரிசோதனைக்கு தோற்ற வேண்டும். பரிசோதனையில் சித்திபெறாதோர் நிராகரிக்கப்படுவர்.

7. **பின்னணி விசாரணைகள்**.- (அ) விண்ணப்பதாரரின் நன்நடத்தையும் அவரின் கிட்டிய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் நன்நடத்தைகள் தொடர்பாகவும் விசாரணைகள் மேற்கொள்ளப்படும். துர்நடத்தையுள்ள விண்ணப்பதாரர்கள் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரி பொய்யான தகவல்கள் வழங்குவது அவரை ஆட்சேர்ப்பிற்கு தகைமை அற்றதாக்கும். ஆட்சேர்ப்பின் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என வெளிப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படுவர்.

8. **அரச மொழி தேர்ச்சிக் கொள்கையை அமுல்படுத்தல்** :

* பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட 07/2007 ஆம் இலக்க 2007.04.28 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச சேவைக்கு/மாகாண அரச சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் தாம் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழிகளிலும் சேவையில் சேர்ந்த திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் தேர்ச்சிபெறல் வேண்டும்.
* 2007.07.01 ஆந் திகதி தொடக்கம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவி நிலைக்கு கீழே சேர்க்கப்படும் அலுவலர்கள், அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.
* நியமனத் திகதியில் இருந்து 5 வருடத்திற்குள் இரண்டாம் அரச கருமமொழியில் சித்தியடையாதவர்களாயின் குறித்த மொழியில் தேர்ச்சியடையும் வரை சம்பள ஏற்றம் நிறுத்தி வைக்கப்படும்.

9. **நியமனக் கொள்கைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உட்பட்டதுமாகும். விதவைகள்/தபுதாரர்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு அங்கத்துவப் பணம் செலுத்துதல் வேண்டும்.

10. **சேவை நிபந்தனைகள்**.- (அ) நியமனம் 3 ஆண்டு கால தகுதிகாண் அடிப்படையில் இருக்கும்.

(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கு இணங்க ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கோ அல்லது இனிமேல் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கோ அமைந்தொழுக வேண்டும்.

(இ) அவர்கள் தாபனக் கோவையின் 1 ஆம், 2 ஆம் தொகுதிகளில் சம்பந்தப்பட்ட ஏற்பாடுகளுக்கும் நிதி ஒழுங்கு விதிகள், திணைக்களக் கட்டளைகள் அத்துடன் பொலிஸ் மா அதிபரினால் அல்லது அரசாங்கத்தினால் காலத்திற்குக்காலம் ஆக்கப்படும் பிற கட்டளைகளுக்கும் உட்பட்டவராவார்கள்.

(ஈ) பதவி உறுதிப்படுத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் விதிக்கப்பட்ட திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும். விதிக்கப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறுவோர் அல்லது பொலிஸ் கடமைகளை ஆற்றுவதற்குத் தகுதியற்றவர் எனக் கருதப்படுவோர் பொலிஸ் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்கள்.

(உ) பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரம் இல்லாமல் தமது பதவியில் உறுதிப்படுத்தும் வரை திருமணம் செய்ய முடியாது. எனினும் 1973.02.28 ஆந் திகதிய 41 ஆம் இலக்கம் கொண்ட பொலிஸ் வர்த்தமானி - பகுதி II பிரகாரமும் மற்றும் 2006.10.19 ஆந் திகதிய 1952/2006 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் 2007.08.09 ஆந் திகதிய பொலிஸ்மா அதிபரின் சுற்றுநிருபத்தின் (திருத்தப்பட்டது) பிரகாரமும் பொலிஸ்மா அதிபரின் அங்கீகாரத்துடன் திருமணம் செய்ய முடியும்.

(ஊ) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் பயிற்சிக்குப் பின் 3 வருட தகுதிகாண் நிலையில் பொலிஸ் திணைக்களத்திலேயே பணியாற்ற வேண்டியதுடன் தகுதிகாண் சேவைக்காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர்கள் பதவி விலக விரும்பின் பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே அவருடைய பயிற்சிக்காகவும் சீருடை மற்றும் ஏனையவைகளுக்கும் செய்த செலவினங்களை செலுத்துவதற்கு விருப்பம் தெரிவித்து ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். அப்பெறுமதி இலங்கைப் பொலிஸ் கல்லூரியின் பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படும். பதவி விலகலை ஏற்றுக் கொள்வதானது 1985 ஆம் ஆண்டின் தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் V ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவிற்கு ஏற்புடையதாக இருத்தல் வேண்டும்.

(எ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை 1693/2003 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொலிஸ் விதிமுறைகளுக்கு ஏற்ப கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஏ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் பயிற்சி கல்லூரியில் பயிற்சி ஆரம்பித்தவுடன் பொலிஸ் மா அதிபரின் 1804/2004 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச சேவைக்கு கட்டுப்பட்டு நடப்பதாக உறுதி/சத்தியம் செய்ய வேண்டும்.

(ஐ) பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பொலிஸ் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வு பெறுவதற்கு உரித்துடையவராவார்.

11. (அ) இவ்வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) வில் வெளியிடப்பட்டுள்ள அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைய பொது நிபந்தனைகளுக்கு கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(ஆ) 1990.03.10 ஆந் திகதிய 15/90 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் நியதிகளின்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

12. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். (மூல ஆவணங் கள் சமர்ப்பிக்கப்படல் ஆகாது) :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) அண்மையில் பெறப்பட்ட குணச் சான்றிதழ்கள் இரண்டு (உறவினர்கள் அல்லாதவர்களிடமிருந்து பெறப்பட்டது);

(இ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் ;

(ஈ) விசேட சாதனையுடன் விளையாட்டுத் துறையில் பெற்ற சான்றிதழ்கள் அல்லது பாடத்திற்குப் புறம்பாகப் பெற்ற சான்றிதழ்கள் ;

(உ) தொழில் அனுபவம் சம்பந்தமான சான்றிதழ் (இருப்பின்) ;

(ஊ) தேசிய அடையாள அட்டையின் பிரதி.

13. (அ) தற்போது அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்புதல் வேண்டும். அத்துடன் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுவிக்க முடியும் என்ற ஒரு சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரர் 11'' x 8'' அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் திணைக்களத்தின் எந்த உத்தியோகத் தர்களிடமும் விண்ணப்பங்களை நேரடியாக கையளித்தலாகாது.

14. இவ்வறிவித்தலின் விதிமுறைகளுக்கு அமைவுறாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அது தொடர்பான விண்ணப்பதாருக்கு அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களுக்கு போக்குவரத்துச் செலவுகளோ, பிற செலவுகளோ வழங்கப்பட மாட்டாது.

பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ் திணைக்களம்**

*பயிலுனர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி*
*(அரச புலனாய்வுப் பணியகம்)*

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.
(தேசிய அடையாள அட்டையின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்திற்குரிய பொலிஸ் நிலையம் -
மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய தேர்தல் தொகுதி :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :----.
பிரதேச செயலாளர் பிரிவு :-----.

(எ) தொலைபேசி இலக்கம் (வதிவிடம்) :-----, கையடக்க தொலைபேசி இல. :-----.

6. (அ) தேசிய இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரஜையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரஜையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----

(இ) வம்சாவளி மூலம் இலங்கைப் பிரஜையானால் பின்வருப வர்களின் பிறந்த இடங்களைக் குறிப்பிடவும் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : அங்குலம் :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் உண்டா ? (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இரு நபர்களின் பெயர், முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

15. (அ) நீங்கள் இதற்கு முன்னர் றிசேவ் பொலிஸ் சேவையின் அல்லது நிரந்தர பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி ஒன்றுக்கு விண்ணப்பித்ததுண்டா? (ஆம் எனின் அது தொடர்பான விபரங்களைத் தருக) :-----.

(ஆ) நீங்கள் இதற்கு முன்னர் நிரந்தர பொலிஸ் அல்லது றிசேவ் பொலிஸ் பொலிஸ் உப சேவையில் சேவை செய்துள்ளீரா ? ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக? :-----.

16. நீங்கள் தற்போது றிசேவ் பொலிஸ் சேவையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் நியமனத் திகதி, பதவிநிலை, இலக்கம் போன்ற விபரங்களினைக் குறிப்பிடுக. நியமனக் கடிதத்தின் பிரதியை இணைக்குக :-----.

17. (அ) நீங்கள் படைதாங்கு சேவையில் சேவையாற்றுகிறீரா ? (அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படைதாங்கு சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்) :-----.

(ஆ) நீங்கள் படைதாங்கு சேவையில் சேவையாற்றியுள்ளீரா ? (அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும்) :-----.

18. (அ) நீங்கள் படைதாங்கு தொண்டர் படையில் சேவையாற்றுகிறீரா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட அப்படை தாங்கு தொண்டர் சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும்) :-----.

(ஆ) நீங்கள் படைதாங்கு தொண்டர் அணிச் சேவையில் சேவை யாற்றியுள்ளீரா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

19. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? (அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

20. உங்கள் உறவினர்கள் எவரேனும் தவறு சம்பந்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அல்லது அது தொடர்பான அழைப்பாணை கொடுக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? (அவ்வாறாயின் விபரம் தருக) :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய் யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பின் எந்த சந்தர்ப் பத்திலும் உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

4-672/2

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## விவசாயத் திணைக்களம்

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை - 2013
**(விவசாயத்தில் டிப்ளோமா கற்கை நெறி - 2014/2016)**

இலங்கை விவசாயக் கல்லூரிகளில், 2014/2016 ஆம் ஆண்டிற்கான இரண்டு வருட டிப்ளோமா கற்கை நெறிக்கு அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் கோரப்படுகின்றது. இப்பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம்/தமிழ் ஆகிய மொழிகள் மூலம் 2013, யூலை மாதம் 27 ஆந் திகதி குறிப்பிட்ட நகரங்களில் அமைக்கப்படவுள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும் :

**2. விவசாய டிப்ளோமா கற்கை நெறி :**

2.1 இலங்கை விவசாயக் கல்லூரிகளினால் நடாத்தப்படும் விவசாய டிப்ளோமா பாடநெறியானது மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவின்கீழ் தற்போது பதிவுசெய்யப்பட்டுள்ளது. இப்பாடநெறி சம்பந்தமாக தேசிய தொழிற்கல்வி தகைமை (NVQ) தரம் 5 ஐயும் 6 ஐயும் அளிப்பதற்காக சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

2.2 விவசாயம் சம்பந்தமான மேற்படி பாடநெறி ஆண், பெண் இருபாலாருக்கும் நடாத்தப்படுவதுடன் இப்பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வில் சித்தியடைபவர்கள் திறமை மற்றும் மாவட்ட அடிப்படையில் அங்குணகொலபெலஸ்ஸ, கரப்பிஞ்ச, குண்டசாலை, பெல்வெஹெர, வவுனியா ஆகிய விவசாயக் கல்லூரிகளுக்கு தெரிவுசெய்யப்படுவார்கள். அங்குணகொலபெலஸ்ஸ, பெல்வெஹெர, கரபிஞ்ச விவசாயக் கல்லூரிகளில் சிங்கள மொழி மூலமும் வவுனியா விவசாயக் கல்லூரியில் தமிழ் மொழி மூலமும், குண்டசாலை விவசாயக் கல்லூரியில் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிமூலமும் பாடநெறி நடாத்தப்படும்.

2.3 இது முழுநேர கற்கை நெறியாகும். இப்பயிற்சி நெறியின்போது கல்லூரி விடுதியில் தங்கியிருத்தல் கட்டாயமானதாகும்.

**3. அனுமதி பெறுவதற்கான தகைமைகள் :**

3.1(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களிலும் கட்டாயமாக திறமைச் சித்தி பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி, விவசாயம், வரலாறு ஆகிய பாடங்களுள் ஏதாவது ஒன்றிலும் திறமைச்

சித்தியுடன் (இதன்படி மொத்தம் நான்கு (04) திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்). இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகம், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஏதாவது மூன்றில் (03) ஒரே அமர்வில் சித்தியடைந்திருக்க வேண்டும். இத்தகைமைகளைக் கொண்டிருப்பவர்களுக்கு தெரிவின்போது மாவட்ட அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும் ;

அல்லது

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய மூன்று (03) பாடங்களிலும் கட்டாயமாக திறமை சித்தி பெற்றிருப்பதோடு, சமூகக்கல்வி, விவசாயம், வரலாறு ஆகிய பாடங்களுள் ஏதாவது ஒன்றிலும் திறமையைச் சித்தியுடன் (இதன்படி மொத்தம் நான்கு (04) திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.) இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். இவ்விரண்டு அமர்வுகளில் ஒன்றில் மூன்று (03) திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து (05) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

க. பொ. த. (உயர் தர) பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றி தாவரவியல், இரசாயனவியல், பௌதீகம், விலங்கியல், விவசாயம், உயிரியல் ஆகிய ஆறு பாடங்களில் ஒன்று (01) அல்லது இரண்டு (02) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) கணிதப் பிரிவில் கற்ற மாணவர்கள், இரசாயனவியல் அல்லது பௌதீகவியல் பாடங்களில் சித்தியடைந்திருத்தல், இக்கற்கை நெறிக்கு அனுமதி பெறுவதற்கான தகுதியாகக் கருதப்படமாட்டாது). இத்தகைமைகளை பெற்றிருப்பவர்கள் 3.1 (அ) பந்திக்கு ஏற்ப விண்ணப்பித்த விண்ணப்பதாரிகளுள் தகைமையுள்ளவர்கள் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் அம்மாவட்டங்களில் மேலும் வெற்றிடங்கள் காணப்பட்டால் மட்டுமே தெரிவு செய்யப்படுவர்.

(இ) ஆங்கில மொழியில் கற்கை நெறியை பயில விரும்பினால், க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இத்திறமைச் சித்தி இரண்டு அமர்வுகளுக்குள் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.)

3.2 வயது.- 2013.05.31 அன்று விண்ணப்பதாரிகள் 17 வயதிற்குக் குறையாமலும், 25 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். அரச சேவையில் தொழில் புரிபவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியுடையவராக மாட்டார்.

**4. பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரல் :**

4.1 இவ்விளம்பரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப, விண்ணப்பங்கள், விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தினால் அல்லது தட்டச்சு செய்யப்பட்டு 8" x 12" (A4 அளவு) அளவுள்ள தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தினை தயாரிக்கும்போது அதன் தலைப்பில் பரீட்சையின் பெயரை தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும். 01 முதல் 10 வரையான விபரங்கள் முதல் பக்கத்தில் அடங்குதல் வேண்டும். 11-14 வரை இரண்டாவது பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அடங்குமாறு தயாரிக்கப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப அமையாத விண்ணப்பங்களும், பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியொன்றை தம் வசம் வைத்திருத்தல் வேண்டும். தாம் பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப அமைந்துள்ளதா என விண்ணப்பதாரி பரீட்சித்துப் பார்த்தல் வேண்டும்.

4.2 பரீட்சைக் கட்டணம் ரூபா 400.- விண்ணப்பதாரியினால் ரூபா 400 பெறுமதியான காசுக்கட்டளையொன்றை விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு பேராதனை தபால் நிலையத்தில் மாற்றக்கூடியவாறு பெற்று விண்ணப்பப்படிவத்தில் சரியான இடத்தில் கழன்றுவிடாமல் காசுக்கட்டளையின் விளிம்பை மாத்திரம் பசையால் ஒட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலும் காசுக்கட்டளையின் நிழற்பிரதியை கைவசம் வைத்துக்கொள்வது பிரயோசனமாகும். எக்காரணத்தைக் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சை கட்டணத்தை வேறு எப்பரீட்சைக்காகவும் மாற்ற முடியாது. இப்பரீட்சை கட்டணத்திற்கான காசுக்கட்டளையை இணைத்து அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

4.3 விண்ணப்பங்கள் 2013, மே மாதம் 31 ஆந் திகதி அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியவாறு "பணிப்பாளர், விரிவாக்க, பயிற்சிப் பிரிவு, விவசாயத் திணைக்களம், பேராதனை" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில், அனுப்பப்படல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் பிந்தும் அல்லது காணாமற்போகும் விண்ணப்பங்களிற்கு விவசாயத் திணைக்களம் பொறுப்பேற்காது.

4.4 விண்ணப்பத்தை அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''விவசாயக் கல்லூரிகளுக்கான அனுமதி 2014-2016'' என்னும் வாக்கியம் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

5. **பரீட்சை நிலையங்கள்**.- 2014/2016 ஆண்டுகளுக்கான விவசாய டிப்ளோமா பாடநெறி சம்பந்தமான விவசாயக் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை, பரீட்சைத் திணைக்களத்தினால் தமிழ், சிங்களம் மொழிமூலம் 2013, யூலை 27 ஆந் திகதி பின்வரும் நகரங்களில் உள்ள பரீட்சை நிலையங்களில் நடாத்தப்படும் :

| பரீட்சை நடைபெறும் நகர இல. | பரீட்சை நடைபெறும் நகரம் | பரீட்சை நடைபெறும் நகர இலக்கம் | பரீட்சை நடைபெறும் நகரம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 08 | குருநாகல் |
| 02 | பதுளை | 09 | மாத்தறை |
| 03 | மட்டக்களப்பு | 10 | திருகோணமலை |
| 04 | கொழும்பு | 11 | வவுனியா |
| 05 | காலி | 12 | இரத்தினபுரி |
| 06 | யாழ்ப்பாணம் | 13 | அம்பாந்தோட்டை |
| 07 | கண்டி | 14 | கிளிநொச்சி |

குறிப்பிட்ட பரீட்சை நிலையமொன்றுக்குப் போதியளவு எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் விண்ணப்பிக்காதவிடத்து, பரீட்சார்த்தியின் இரண்டாவது விருப்பில் தெரிவான பரீட்சை நிலையம் அல்லது பரீட்சார்த்திகள் விண்ணப்பித்த நகரத்திற்கு அண்மையிலுள்ள வேறு ஒரு நிலையம் அவர்களுக்கு வழங்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம்/நகரங்களையோ போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழி மூலத்தையோ பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5. **பரீட்சை முறைமை**.-

6.1 எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் நேரசூசி என்பன கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| | விடயங்கள் | கால அளவு | நேர சூசி |
|---|---|---|---|
| I. | விவசாயம் (100 புள்ளிகள்) க. பொ. த. (சா. த.) விவசாய பாடப்பரப்பிற்கு அமைவானதும் விவசாயத் துறையோடு தொடர்பான பொது விடயங்களையும் கொண்டு தயாரிக்கப்பட்ட பல்தேர்வு, சுருக்க வினாக்கள் அடங்கியது). எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். | 1 மணித்தியாலம் | 09.30 மணி - 10.30 மணி |
| II. | விவேகப் பரீட்சை (100 புள்ளிகள்) (ஒழுங்கமைப்பு, தொடர்பு காணல் ஊகித்தல், ஒப்பிடுதல், பகுத்தறிதல் போன்ற திறன்களை மதிப்பிடுவதற்கானது) பல்தேர்வு சுருக்க வினாக்கள் 50 ஐ உள்ளடக்கியது. எல்லா வினாக்களுக்கு விடையளிக்கவும். | 1 மணித்தியாலம் | 11.00 மணி - 12.00 மணி |
| III. | ஆங்கில மொழி (புள்ளிகள் 100) (க. பொ. த. (சாதாரண தரப்) பாடப்பரப்புக்கமைய வினாத்தாள் தயாரிக்கப்படும் ஆங்கில மொழியில் ஒரு விடயத்தை விளங்கிக்கொள்ளல், ஆங்கில மொழி மூலம் தொடர்பாடலுக்கான திறமையையும் ஓரளவு ஆங்கில இலக்கண அறிவையும் பரீட்சிப்பதற்கான பரீட்சையாக இருக்கும்.) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். (இவ்வினாத்தாள் ஆங்கில மொழி மூலத்தில் கற்கை நெறியை பயில விரும்பும் மாணவர்களுக்கு மாத்திரமாகும்). | 1 மணித்தியாலம் | 13.30 மணி - 14.30 மணி |

6.2 சிங்களம் அல்லது தமிழ் மொழியில் கற்கை நெறியைப் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள், கட்டாயமாக, தாம் கற்கை நெறியை தொடருவதற்குத் தெரிவு செய்த மொழி மூலமே முதலாம் இரண்டாம் வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

6.3 ஆங்கில மொழியில் கற்கை நெறியை பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விருப்புக்கேற்ப சிங்களம் அல்லது தமிழ் மொழியில் I ஆம், II ஆம் வினாத்தாள்களிற்குத் தோற்ற முடியும். இதற்கேற்ப சகல விண்ணப்பதாரிகளும் எழுத்து மூலப் பரீட்சையின் முதலாம், இரண்டாம் வினாப்பத்திரங்களுக்கு சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலம் தோற்ற முடியும். ஆங்கில மொழியில் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் ஆங்கில மொழி பரீட்சைக்கு கட்டாயமாக தோற்றுதல் வேண்டும்.

6.4 3.1, 3.2 ஆகிய பந்திகளில் குறிப்பிட்டுள்ள தகைமைகளையுடைய சகல விண்ணப்பதாரிகளுக்கும் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையத்தின் பிரதான மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டை பரீட்சைத் திணைக்களத்தினால் அஞ்சல் செய்தவுடன் உடனடியாக பத்திரிகைகளில் பரீட்சைக்கான விளம்பரம் பிரசுரிக்கப்படும். விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தினத்தின் பின்பு 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவிடத்து விளம்பரத்தில் குறிப்பிட்டவாறு தமது தொலைநகல் இலக்கத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கவும். அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதவர்கள் தம்மிடம் இருக்கும்,

(அ) விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதி ;
(ஆ) பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்பிரதிகள் ;
(இ) பதிவுத்தபால் பற்றுச்சீட்டு என்பவற்றுடன் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளவும்.

6.5 பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகள் பற்றிய விபரத்தினை அவர்களுக்கு அனுப்பிவைக்கும். மாவட்ட அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பரீட்சார்த்தியொருவர் எழுத்துப் பரீட்சைக்கு/நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருப்பினும் அத்தகைய அனுமதி காரணமாக அவர் தகைமையுடையவர் எனக் கருத்திற்கொள்ள முடியாது. ஒரு பரீட்சார்த்தி பரீட்சைக்கு முன்னரோ அல்லது பின்னரோ அல்லது பரீட்சையினை எந்நிலையிலுமோ இப்பிரமாணத்தின்படி தகைமையற்றவர் எனக் கண்டால் அவரின் பரீசார்த்தத் தன்மை இரத்துச்செய்யப்படும்.

6.6 எழுத்துப் பரீட்சைக்கும், நேர்முகப் பரீட்சைக்கும் தோற்றுவதற்கு அரசினால் எந்தவிதப் படிகளும் செலவுகளும் வழங்கப்படமாட்டாது.

**7. தெரிவு செய்யப்படும் முறை :**

7.1 சேர்த்துக்கொள்ளப்படும் வருடத்தில் ஒவ்வொரு மொழி மூலத்திலும் விவசாயக் கல்லூரிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்படும் மொத்த எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு விண்ணப்பதாரிகளைக் கொண்டுள்ள மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு மொழி மூலத்திலும் கல்லூரிகளுக்கு அனுமதிக்கப்படும் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். அதன் பின்னர் ஒவ்வொரு மொழி மூலத்திற்குமான அம்மாவட்டத்தின் விண்ணபதாரிகளிலிருந்து போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் அடிப்படையில் உயர் திறமை காட்டியுள்ள விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். அவ்வாறான தெரிவின்போது கீழ்க்காணும் விடயங்களும் கருத்தில் எடுக்கப்படும்.

7.2 க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டமே அவ்விண்ணப்பதாரியின் மாவட்டமாக கொள்ளப்படும். க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய மாவட்டத்தின் இலக்கத்தை அறிவதற்கு இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் காணப்படும் இணைப்பு இல. 01 ஐ பார்க்கவும். இவ்விலக்கத்தை விண்ணப்பப்படிவத்தில் 5 ஆவது கேள்வியை பூர்த்திசெய்ய பயன்படுத்தவும்.

7.3 விவசாயம், விவேகப் பரீட்சை ஆகிய இரு வினாத்தாள்களிலும் பெற்ற புள்ளிகளின் கூட்டுத்தொகையின் அடிப்படையில்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சித்தியடைந்தவர்களின் பட்டியலில் மாவட்ட மட்டத் தேர்வில் விண்ணப்பப்படிவத்தின் 5 ஆவது கேள்விக்கான மறுமொழிகள் அடிப்படையாகக் கொள்ளப்படும். க. பொ. த. (உ. த.) உயிரியல் பிரிவில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்று போட்டிப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தவர்கள் முன்னுரிமை அடிப்படையில் முதலில் தெரிவு செய்யப்படுவர். குறித்த மாவட்டமொன்றில் குறித்த மொழி மூலத்திற்கு அவ்வாறு சித்தியடைந்தவர்கள் இல்லாதவிடத்து அல்லது அவ்வாறான விண்ணப்பதாரிகள் போதியளவு காணப்படாதவிடத்து மாத்திரம் அம்மாவட்டத்திலிருந்து அம்மொழி மூலத்திற்கு தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகளின் தொகைக்கு பொருந்தும் வகையில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரு பாடத்தில் அல்லது இரு பாடங்களில் சித்தியடைந்த மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதாரிகளில் போட்டிப் பரீட்சையில் மிகத் திறமையாக சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தெரிவுசெய்யப்படுவர். இத்தெரிவு கட்டாயமாக 7.1, 7.2 இல் குறிப்பிட்டபடி மாவட்ட அடிப்படையில் போட்டிப் பரீட்சையில் திறமை அடிப்படையில் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையில் மேற்கொள்ளப்படும். குறித்த வருடத்தில் ஒவ்வொரு விவசாயக் கல்லூரிக்கும் அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியர் தொகை, அக்கல்லூரிகளில் ஆண்/பெண் விடுதி வசதிக்கேற்பவும் பயிற்சி வசதிகளுக்கேற்பவும் தீர்மானிக்கப்படும். எனவே மாணவர் தெரிவின்போது போட்டிப் பரீட்சையின் இரண்டு பாடங்களிலும் பெற்ற கூட்டுப் புள்ளிகளின் வெட்டுப்புள்ளி மட்டம் குறித்த மாவட்டத்தில் ஆண், பெண் விண்ணப்பதாரிகளிடையேயும் பாடநெறியை பயிலும் மொழி மூலத்திற்கேற்பவும் வேறுபடும். ஏதாவதொரு மாவட்டமொன்றில் போதியளவு தகுதியுடைய மாணவர் தொகை காணப்படாதவிடத்து குறித்த மொழி மூலத்தில் கல்லூரிகளின் அனுமதியை பூரணப்படுத்துவதற்காக சம எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் ஏனைய மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்படுவர்.

7.4 இதற்கேற்ப மாவட்டத்தில் போட்டிப் பரீட்சையில் இரு பாடங்களிலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற குறித்த அளவான விண்ணப்பதாரிகள் அவர்களின் கல்விச் சான்றிதழ்களையும் ஏனைய சான்றிதழ்களையும் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப்பரீட்சையின்போது விண்ணப்பதாரிகள் தங்களது சான்றிதழ்களின் மூலப்பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. விவசாயக் கல்லூரிகளுக்குத் தெரிவுசெய்யப்படும் எண்ணிக்கையைவிட அதிகளவான விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

7.5 ஆங்கில மொழிமூலத்தில் பயில விரும்பும் விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழிப் பரீட்சையில் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும். ஆங்கில மொழிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் போதியளவு காணப்படாதவிடத்து மாத்திரம் இச்சித்தி பெறுவதற்கான குறைந்தபட்சப் புள்ளி வீதத்தின் அளவு மாற்றியமைக்கப்படலாம். ஆங்கில மொழியில் பயில்வதற்கு திறமை அடிப்படையிலும், அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையிலும் விண்ணப்பதாரிகள் மாவட்ட அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். ஆங்கில மொழிப் பரீட்சையில் குறைந்தபட்ச புள்ளிகளைப் பெற்று தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் முதலாம், இரண்டாம் வினாத்தாள்களில் பெற்ற புள்ளிகளின் கூட்டுத் தொகைக்கேற்ப கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளவர்கள் 3.1 பந்தியில் உள்ள தகைமைப்படி திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். ஆங்கில பரீட்சைக்குத் தோற்றி சித்தியடையாத விண்ணப்பதாரிகள் அவர்கள் போட்டிப் பரீட்சையில் 1 ஆம் 2 ஆம் வினாத்தாள்களிற்கு உயர் புள்ளிகள் பெற்று சித்தியடைந்திருப்பின், திறமைக்கேற்ப தமது மாவட்ட அடிப்படையில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் பயில்வதற்கு சேர்த்துக்கொள்வது தொடர்பில் கவனமெடுக்கப்படும்.

**8. "குசுமா லக்ஸ்மி கருணாதிலக்க" ஞாபகார்த்தப் புலமைப் பரிசில் :**

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் வினாத்தாள் I, II என்பனவற்றில் அதிகூடிய புள்ளியைப் பெறும் எந்த மொழியிலேனும் பயிற்சியை மேற்கொள்ளும் பெண் விண்ணப்பதாரி ஒருவருக்கு மேற்படி புலமைப் பரிசில் அதன் விதிகளுக்கு அமைய 2 வருட காலத்திற்கு வழங்கப்படும். புலமைப் பரிசிலைப் பெற்றவருக்கு குண்டசாலை விவசாயக் கல்லூரியில் பயில சந்தர்ப்பம் வழங்கப்படும். இப்புலமைப் பரிசின் வருடாந்தப் பெறுமதி ரூபா 10,000 ஆகும்.

கே. ஜீ. சிறியாபால,
விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

விவசாயத் திணைக்களம்,
பேராதனை,
2013.03.28.

***இணைப்பு இல. - 01***

**மாவட்டத்தின் பெயர்களும் அவற்றின் இலக்கமும்**

(7.2 பந்திக்கு ஏற்புடையதாகும்)

| மாவட்ட இல. | மாவட்டம் | மாவட்ட இல. | மாவட்டம் |
|---|---|---|---|
| 01 | அநுராதபுரம் | 14 | கம்பஹா |
| 02 | பதுளை | 15 | களுத்துறை |
| 03 | மட்டக்களப்பு | 16 | மாத்தளை |
| 04 | கொழும்பு | 17 | நுவரெலியா |
| 05 | காலி | 18 | மன்னார் |
| 06 | யாழ்ப்பாணம் | 19 | முல்லைத்தீவு |
| 07 | கண்டி | 20 | அம்பாறை |
| 08 | குருநாகல் | 21 | புத்தளம் |
| 09 | மாத்தறை | 22 | பொலன்னறுவை |
| 10 | திருகோணமலை | 23 | மொனராகலை |
| 11 | வவுனியா | 24 | கேகாலை |
| 12 | இரத்தினபுரி | 25 | கிளிநொச்சி |
| 13 | ஹம்பாந்தோட்டை | | |

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப்பரீட்சை - 2013
விவசாய டிப்ளோமா பாடநெறி - 2014/2016

**(Competitive Examination for Admission to Sri Lanka School of Agriculture – 2013**
**Diploma in Agriculture - (2014/ 2016)**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

1\. பரீட்சைக்குத் தோற்றும் நிலையம் அமைந்துள்ள நகரம் :
1 ஆம் தெரிவு ................................
2 ஆம் தெரிவு ................................

அப்பரீட்சை நிலைய இலக்கம்
.........................
.........................

(வர்த்தமானி அறிவித்தலின் முதலாவது பந்திக்கு அமைய)

2\. பரீட்சைக்குத் தோற்றும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3

........................

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3\. பாடநெறியை பயிலுவதற்கு விரும்பும் மொழி :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

...................

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4\. பால்

| | |
|---|---|
| ஆண் | 0 |
| பெண் | 1 |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

5\. க.பொ.த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் :
......................

(7.2 பந்திக்கு ஏற்ப இணைப்பு இலக்கம் 1 ஐப் பார்க்க)

மாவட்ட இலக்கம் :
...........

6\. க.பொ.த. (உ.த.) உயிரியற் பிரிவில் தோற்றி சித்தி பெற்றுள்ள பாடங்களின் எண்ணிக்கை (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
03 பாடங்கள் ஓர் அமர்வில் - 3
02 அல்லது 01 பாடம் ஓர் அமர்வில் - 2

சித்தியடைந்த பாடங்களுக்கேற்ப உரிய இலக்கம்
............................

(3.1 பந்திக்கு ஏற்ப)

7\. (அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு) :-----.
(தெளிவான எழுத்தில்)

(ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் Capital எழுத்தில் முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு) : ----.
(உதாரணம் : ANANDA, K. C. B.)

(ஆ) (i) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் :-----.

(ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கில Capital எழுத்தில்) : ----.

8\. (i) முழுமையான முகவரி :-----.
(ii) பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை அனுப்ப வேண்டிய முகவரி :----.
(ஆங்கில Capital எழுத்தில்) :-
(iii) தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் இருப்பின் :----.

9\. (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றிய பாடசாலையும் முகவரியும் :----.

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (தமிழில்) :----.

(இ) க. பொ. த. (சா. த.) பரீட்சைக்கு முதல் முறையாக தோற்றிய பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் (ஆங்கிலத்தில்) :----.

10. தேசிய அடையாள அட்டை இல. : | | | | | | | | | |

11. (அ) தற்போது வதியும் தேர்தற்தொகுதி (தமிழில்) :-----.
(ஆ) தற்போது வதியும் தேர்தற் தொகுதி (ஆங்கிலத்தில்) :-----.

12. பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

13. 2013.05.31 ஆந் திகதி அன்று வயது : வருடங்கள் | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

14. இப்பகுதியை பூரணப்படுத்த முன் வர்த்தமானி அறிவித்தலை கவனமாக வாசித்தல் வேண்டும் :----.

(அ) இந்த அறிவித்தலின் 3.1 ஆம் பந்திக்கு ஏற்ப க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விண்ணப்பதாரி சித்தியடைந்த ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ்மொழி<br>2. கணிதம்<br>3. விஞ்ஞானம்<br>4. விவசாயம்<br>5. சமூகக்கல்வி<br>6.<br>7.<br>8.<br>9.<br>10. | | |

(ஆ) வர்த்தமானி அறிவித்தலின் 3.1 பந்திக்கு அமைய கட்டாயம் திறமைச் சித்தி பெறவேண்டிய நான்கு பாடங்கள் தொடர்பான விபரங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. தமிழ்மொழி<br>2. கணிதம்<br>3. விஞ்ஞானம்<br>4. விவசாயம்<br>5. சமூகக்கல்வி | | |

(இ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் உயிரியற் பிரிவில் தோற்றினீரா? ஆம்/இல்லை (தேவையற்ற சொல்லை கீறிவிடவும்)

(ஈ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்கள் :

| சுட்டெண் | வருடமும் மாதமும் | சித்தியடைந்த பாடங்கள் | பாட எண் | சித்தியடைந்த தரம் |
|---|---|---|---|---|
| | | 1. உயிரியல்<br>2. விவசாயம்<br>3. பௌதீகவியல்<br>4. இரசாயனவியல்<br>5. விலங்கியல்<br>6. தாவரவியல் | | |

(உ) மேலேயுள்ள தகைமைகளை உறுதிப்படுத்த சான்றிதழின் நிழற் பிரதிகளை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும். (மூலப்பிரதியை அனுப்பத் தேவையில்லை)

சான்றிதழ்களின் நிழற் பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளனவா ? :-----.

15. (i) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் :-----.
(ii) பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரும் முகவரியும் :-----.
(ஆங்கிலத்தில் Capital எழுத்தில்)

16. பணம் செலுத்திய காசுக்கட்டளையின் விபரங்கள் :

16.1 காசுக் கட்டளை இலக்கம் :-----.
16.2 விநியோகிக்கப்பட்ட தபால் நிலையம் :-----.
16.3 காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் நிலையம் :----.
(இது கட்டாயம் பேராதனை தபால் நிலையமாக இருத்தல் வேண்டும்).

| |
|---|
| காசுக்கட்டளையின் மேல் விளிம்பை மாத்திரம் இங்கு பசையால் ஒட்டுதல் வேண்டும். காசுக்கட்டளையின் நிழற்பிரதியொன்றை கட்டாயமாக தம் வசம் வைத்துக்கொள்ளவும். |

**பரீட்சார்த்தியின் உறுதியுரை** :

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதாகவும் தமிழ், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றிற்கு திறமைச் சித்தியும் விவசாயம் அல்லது சமூகக்கல்வி இரண்டில் ஒன்றிற்கு திறமைச் சித்தியும் உயர்தரத்தில் உயிரியற் பிரிவில் பயின்று வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட தகைமைகளை பெற்றுள்ளேன் என உறுதியளிக்கிறேன். இதிலடங்கிய விபரங்களில் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படுமிடத்து நான் தகைமை இழப்பேன் என்பதையும் அறிவேன். பரீட்சை தொடர்பான பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு அமைவாக நடக்க நான் சம்மதிக்கிறேன்.

-----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**கல்வித் தகைமைகளையும் கையொப்பத்தையும் உறுதிப்படுத்தல்**

(திணைக்களத் தலைவர் ஒருவரால், பாடசாலை அதிபர் ஒருவரால், சமாதான நீதவானால், சட்டத்தரணியால் அல்லது வருடத்திற்கு திரட்டிய சம்பளமாக ரூபா 2,30,060 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

மேலே கையொப்பமிட்ட திரு./திருமதி/செல்வி ............................................... என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். மேலும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள க. பொ. த. (சா. த.), க. பொ. த. (உ. த.) தகைமைகளை பெற்றுள்ளார் என வர்த்தமானி அறிவித்தலையும் கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை பரீட்சித்து அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும் உரிய பரீட்சை கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்பதையும் அதற்கான பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

4-654

## அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்கு சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை - 2012 (2013)

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் பதவிக்கான தற்போதைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்தின் உத்தியோகத்தர்களை இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக அரச சேவை ஆணைக்குழுச் சபையின் உத்தரவின் பிரகாரம் விண்ணப் பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப் பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப்படிவத்தினை கீழ்க்குறிப்பிடப்பட்ட தினம் அல்லது அதற்கு முன்னர் பரீட்சை "ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்குச் சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்களைக் கோரும் இறுதித் திகதி** : 2013.05.27.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்துக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்க்கும் ஒழுங்கு விதிமுறைகள்**.- (அ) சிரேஷ்ட மற்றும் நுண்ணறிவுப் பரீட்சையில் பெற்றுக் கொண்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் தகைமைத் தொடருக்கு அமைய தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கான பரிசோதனைக்கு அழைத்து நியமனத்திற்காகத் தகைமை பெற்றுள்ளாரா என்பதனைப் பரிசீலனை செய்ததன் பின்னர் நியமனத்திற்காகத் தேர்ந்தெடுக்கப் படுவர். நியமனம் அமுலுக்கு வரும் திகதி மற்றும் நியமிக்கப்படும் எண்ணிக்கை அரச சேவை ஆணைக்குழுச் சபையினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு வெற்றிட எண்ணிக்கை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கான அதிகாரம் அரச சேவை ஆணைக்குழுச் சபைக்கு உரியதாகும்.

(ஆ) தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட பரீட்சார்த்தி உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாதிருப்பின் தகைமைத் தொடருக்கு அமைய ஆவணத்தின் அடுத்த பரீட்சார்த்தி யின் தகைமையைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**.- (i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1225/32 மற்றும் 2002.03.01 ஆந் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களுக்கு அமைய இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிற்கு இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களுக்கும் அரச சேவையின் நியமனத்தைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ii) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய சம்பளங் கொண்டது. விதவைகள் தபுதாரர் ஓய்வூதியச் சம்பளத் திட்டத்திற்குப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும்.

(iii) இந்நியமனம் ஒரு (01) வருட பதில் கடமைக் காலத்திற்கு உட்படும்.

(iv) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 7/2007 இற்கமைய ஏனைய மொழி தொடர்பான தேர்ச்சி மட்டத்தினை 05 வருடங்களுக்குள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அரச மொழியல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களினால் 03 வருடங்களில் ஒரு அரச மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் ஏனைய அரச மொழி தொடர்பான தேர்ச்சியினை 06 வருடங்களுக்குப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

(v) அரச சேவை ஆணைக்குழுச் சபையின் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள், திணைக்களத்தின் ஏனைய உத்தரவுகளுக்கும் இந்நியமனம் கட்டுப்பட்டிருக்கும்.

3. **சம்பள அளவு**.- இந்நியமனத்திற்குரிய மாதாந்த சம்பளம் SL – 1 - 2006 ரூ. 22,935 – 10 x 645 – 8 x 790 – 17 x 1,050 – ரூபா 53,555/= ஆகும். பொது நிர்வாகச் சுற்றறிக்கை 06/2006 இற்கமையச் சம்பளம் செலுத்தப்படும்.

4. **தகைமைகள்**.- இவ்வாசகத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புக்களின் ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு கீழ்க்குறிப்பிடப்பட்ட தகைமைகள் கொண்ட தற்போது சேவையில் உள்ள உத்தியோ கத்தர்கள் சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் நியமிக்கப் படுவதற்கான பொது உளச்சார்புப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர்.

(i) இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்தில் குறைந்த பட்சம் மூன்று வருட காலம் சேவையாற்றியுள்ள மற்றும் அச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட உத்தியோகத்தராக இருத்தல்.

(ii) மூன்று வருட கால சேவைக்காலம் கணிப்பீடு செய்யப் படுவது விண்ணப்பப்படிவத்தினைப் பொறுப்பேற்கும் இறுதித் தினத்திற்காகும்.

(iii) சகல விண்ணப்பதாரர்களும் திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினமன்று அண்மித்த ஐந்து வருடங்களுக்குள் சகல சம்பளப்படி

உயர்வுகளையும் உரிய தினத்திற்குப் பெற்றுள்ள மற்றும் அக்காலத் திற்குள் ஒழுக்காற்றுத் தண்டனை (எச்சரிக்கை தவிர) பெற்றிராத உத்தியோகத்தர் மாத்திரம் திருப்திகரமான சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்தவராகக் கருதப்படுவர். விண்ணப்பப்படிவத்தினைக் கோரும் இறுதித் தினம் வரை சேவையில் இடைநிறுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர் இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கத் தகைமையற்றவ ராவார். பரீட்சை நடைபெறுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்கு விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுவர்.

5. **வயதெல்லை**.- சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் முதலாம் தரத்தின் உத்தியோகத்தர் மற்றும் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்வதற்கான வயதெல்லை கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

6. **உடற்தகைமை** :

(அ) சகல விண்ணப்பதாரர்களும் சிறந்த நன்னடத்தை மற்றும் சுகாதார தேகாரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக் கட்டுப்படுதல் வேண்டும்.

7. ***ஏனைய தகைமைகள்***.- (i) விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பத்தினைக் கோரும் இறுதித் தினமன்று பதவிக்குச் சேர்த்துக் கொள்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8.

8.1 ***எழுத்துமுலப் பரீட்சை*** :

8.1.1 பொது உளச்சார்பு – இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் ஒரு மணித்தியால வினாப்பத்திரம் - 50 புள்ளிகள்

8.1.2 பாடவிதானம் – கல்வியின் மூல அம்சங்கள் மற்றும் கல்வியின் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தித் திறன் செயற்பாடுகள் மற்றும் பாடசாலை, கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புக்களுக்காகத் தேவையான ஊழியர்கள் உயர்ந்தபட்சப் பயனைப் பெறக் கூடியவாறு பெற்றுக்கொள்ளல் மற்றும் ஈடுபடுத்துதல் தொடர்பான வினாக்கள் அடங்கியிருக்கும். (சகல வினாக்களுக்கும் பதிலளித்தல் வேண்டும்)

8.2. ***சிரேஷ்ட மற்றும் அனுபவத்திற்காகப் புள்ளி வழங்கும் முறை*** -

(1) சேவை அனுபவம்.- குறைந்தபட்ச சேவைக்காலம் எனப்படுவது மூன்று வருடங்களைத் தவிர அத்தரத்தில் எஞ்சிய திருப்திகரமான சேவைக்காலம் புள்ளி வழங்கும் போது கணிப்பீடு செய்யப்படும். ஒரு வருடத்திற்கு 08 புள்ளிகள் வீதம் உரித்தாவதுடன் ஒரு வருடத்தை விடக் குறைந்த சேவைக்காலத்திற்காக 3 மாதங்களுக்கு 2 புள்ளிகள் வீதம் உயர்ந்தபட்சம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.

8.3. ***நேர்முகப் பரீட்சை***.- (i) சிரேஷ்ட மற்றும் பொது உளச்சார்புப் பரீட்சைக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் தகைமைத் தொடருக்கு அமைய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் உரிய எண்ணிக்கையினருக்கு மாத்திரம் தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

(ii) தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட எவரேனும் ஒரு பரீட்சார்த்தி அல்லது பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாதிருப்பின் ஏதேனும் ஒரு வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் தகைமைத் தொடருக்கு அமைய பட்டியலில் அடுத்த பரீட்சார்த்தியூடாக வெற்றிடம் நிரப்பப்படும்.

(iii) சமமான புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளில் ஒருவரை விடக் கூடுதலாக விருப்பின் அது தொடர்பில் அரச சேவை ஆணைக்குழுச் சபையினால் தீர்மானம் எடுக்கப்படும்.

(iv) அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையூடாக பரீட்சார்த்திகளின் தகைமைகள் பரிசீலனை செய்யப்படுவதுடன் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

9. **பரீட்சை நிபந்தனைகள்**.- (i) பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பிய ஏதேனும் ஒரு மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சார்த்திக்கு தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றியமைக்க அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(ii) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பிலிடக் கூடியவாறு நாட்டிலுள்ள எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(iii) பரீட்சைக்காகச் செலுத்தப்படும் நிதி எக்காரணம் கொண்டும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

(iv) இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

(v) முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசிக்க இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டியது தமது கையொப்பத்துடன் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை ஆகும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமைகளைப் பூர்த்திசெய்ததாக ஏற்றுக்கொண்டல்ல என்பதனையும் கருத்திற்கொள்ளுதல் வேண்டும்.

(vi) விண்ணப்பப்படிவம் 22 – 29 சென்ரிமீற்றர் அளவில் ஏ4 கடதாசியில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் 1 – 2 வரையான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும் 3 தொடக்கம் 9 வரையான தலைப் புக்கள் 2 ஆம் பக்கத்திலும் எஞ்சியவை 3 ஆம் பக்கத்திலுமாகத் தயாரிக்கப்பட வேண்டியதுடன் உரிய தகவல்களை தமது கையெழுத் தின் ஊடாகத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். மாதிரி விண்ணப் பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரிய விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறல்லாத பட்சத்தில் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதையும் மேலும் அறியத்தருகிறேன். இதனுடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கவும்.

(vii) விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாக அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன் பரீட்சைக்காக விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் பின்னர் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தாங்கள் வைத்துக் கொண்ட விண்ணப்பப் படிவத்தின் போட்டோப் பிரதியினையும், பதிவுப் பற்றுச்சீட்டினையும் கொழும்பிற்கு வெளிப் பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கத்தினையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்தினை வைத்துக் கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது மிகப் பொருத்தமானதாகும்.

(viii) அரச சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு இணங்க பரீட்சை ஒத்தி வைக்க அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் பரீட்சை ஆணையாக்ஷ நாயகத்திற்கு உரியதாகும்.

(ix) பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

(x) *பரீட்சார்த்தியின் அடையாளங்கள்.*- பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியடையக் கூடியவாறு சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

**குறிப்பு** :

(அ) விண்ணப்பப்படிவத்தில் ஏதேனும் ஒரு ஆவணம் அல்லது பிரதியினை இணைக்கக் கூடாது.

(ஆ) கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சாத்தியின் விண்ணப்பம் தொடர்பில் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

அரச சேவை/மாகாண அரச சேவை, அரச கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களினால் தமது திணைக்களம்/ நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப் புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்ப தாரர்களும் தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்துவது கட்டாய மாகும். ஒரு நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி அவரது கையொப்பத்தினை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் பொறுப்பாளர் ஊடாக உறுதிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறில்லாத விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தினை அரச பாடசாலைப் பொறுப்பாளர்கள்/ ஓய்வூதியப் பொறுப்பாளர்/ பிரிவுக் கிராம சேவை உத்தியோகத்தர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிஸ், முப்படையின் அதிகாரிகள், ரூபா 240,360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தினைப் பெறும் அரச அல்லது மாகாண சேவையில் உள்ள நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாரையின் விகாராதிபதி அல்லது தேரர் அல்லது வேறு சமயத் தலைவர்கள் ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் அரச சேவை ஆணைக்குழுச் சபைக்கு உரியதாகும்.

எஸ். எம். கோடாபய ஜயரட்ண,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

2013.04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சை - 2012 (2013)**

Competitive Examination for Recruitment to Class III of the Sri Lanka Education Administrative Service on the Basis of Seniority and Merit – 2012 (2013)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

1. (i) முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ----.
உதாரணம் : SILVA, G.A.

(ii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :----.

(iii) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----

2. (i) தற்போதைய சேவை நிலையம் மற்றும் அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

(ii) தனிப்பட்ட முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ----.

(iii) அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :

3. (i) ஆண், பெண் பால் –
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

(ii) இன வகை –
சிங்களம் - 1
தமிழ் - 2
இந்தியத் தமிழ் - 3
முஸ்லிம் - 4
ஏனையவை - 5
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

(iii) தேசிய அடையாள அட்டை இல. :

4. (i) பிறந்த திகதி –

ஆண்டு மாதம் திகதி

(ii) 2013.05.27 ஆந் திகதியன்று வயது –

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

(iii) விவாக நிலை -
திருமணமாகாதவர் - 1
திருமணமானவர் - 2
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

5. சேவை விபரம் -

(i) முதல் நியமனப் பதவி மற்றும் முதல் நியமனத் திகதி : ----.

(ii) தற்போது தாங்கள் அடங்கும் மாகாணக் கல்வி அலுவலகம்/ வலயக் கல்வி அலுவலகம் :----.

(iii) அதிபர் பதவியின் 1 ஆந் தரத்துக்காக நியமனம் பெற்ற திகதி :----.

6. கல்வித் தகைமை :----.

7. தொழிற் தகைமை :----.

8. பங்கேற்றுள்ள பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான விபரங்கள் :----.

9. விண்ணப்பப்படிவத்தினைப் பொறுப்பேற்கும் இறுதித் தினமன்று அண்மித்த ஐந்து வருடங்களுக்குள் குற்றமொன்றுக்குப் பெற்ற ஏதேனும் ஒரு முறையிலான அல்லது (எச்சரிக்கை தவிர) தண்டனைகள் தொடர்பான விபரங்கள் :----.

10. (i) விண்ணப்பப்படிவத்தினைப் பொறுப்பேற்கும் இறுதித் தினமன்று அண்மித்த ஐந்து வருடங்களுக்குள் சகல சம்பளப்படி உயர்வுகளும் பெறப்பட்டுள்ளதா? :----.

(ii) பெறப்படாதிருப்பின் அதற்கான காரணம் :----.

11. தங்களுக்கு எதிராக தற்போது ஏதேனும் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டிருப்பின் அது தொடர்பான தற்போதைய நிலைமைகள் :----.

12. கடந்த 05 வருடங்களுக்குள் சம்பளமின்றி அல்லது அரைச்சம்பள விடுமுறைகள் பெறப்பட்டிருப்பின் அது தொடர்பான விபரங்கள் :----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு சிரேஷ்ட மற்றும் தகைமை அடிப்படையில் பதவியுயர்த்துவதற்காக கருத்திற்கொள்ள நான் தகைமை கொண்டவர் என்றும் இவ்விண்ணப்பப்படிவத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் தெரிவிக்கிறேன். மேலும் பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டங்களுக்குக் கட்டுப்படுவதாகத் தெரிவிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

மேற்கூறப்பட்ட 05 தொடக்கம் 12 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவை விபரங்கள் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானது என உறுதிப்படுத்துகிறேன். மேலும் உரிய பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 செலுத்தப்பட்டமைக்கான பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்துகிறேன்.

----,
வலயக் க.ப./ மாகாண க.ப./ மாகாண க.செ.

திகதி :----.

பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 இனைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும் (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியினை வைத்துக் கொள்ளவும்)

4-715/ 1

---

## அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012 (2013)

திறந்த போட்டிப் பரீட்சை மூலமாக இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்பின் பதவிகளில் தற்போது வெற்றிடமாகியுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமை கொண்டோரைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைக்காக அரச சேவை ஆணைக்குழுச் சபையின் உத்தரவின் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பப்படிவத்தினை கீழ்க்குறிப் பிடப்பட்ட தினம் அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை கல்வி நிர்வாக சேவையின் 111 ஆம் வகுப்புக்குச் சோத்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்களைக் கோரும் இறுதித் திகதி** : 2013.05.27.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அதனுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதித்துக் கிடைத்தல் சம்பந்தமான முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப் படிவங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை விண்ணப்பதாரர்களே ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்க்கும் ஒழுங்குவிதிமுறைகள்**.- (அ) நியமனத் திற்காகச் சேர்த்துக் கொள்ளப்படுவது எழுத்து மூலப் பரீட்சையில் அவ்வப் பாடங்களில் (I ஆவது மற்றும் II ஆம் பகுதிகள் மூலம்) 40% வீதத்தினை விடக் குறையாத மொத்தப் புள்ளிகளின் தகைமைத் தொடருக்கு அமைய தகைமைகளைப் பரிசீலனை செய்யும் பரீட்சைக்காக அழைப்பதற்காக அரச சேவை ஆணைக்குழுச் சபையினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் தகைமைகள் தொடர்பில் பரிசீலனைகள் செய்யப்பட்டதன் பின்னராகும். நியமனத்தை அமுல்படுத்தும் திகதி, நியமிக்கும் எண்ணிக்கை அரச சேவை ஆணைக்குழுச் சபையினால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு வெற்றிட எண்ணிக்கையினை அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரச சேவை ஆணைக்குழுச் சபைக்கு அதிகாரம் உண்டு.

(ஆ) தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்காக அழைக்கப்பட்ட பரீட்சார்த்தி உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யாதிருப்பின் தகைமைத் தொடருக்கு அமைய ஆவணத்தின் அடுத்த பரீட்சார்த்தியின் தகைமையைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்.

(இ) நியமிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுவது பரீட்சையின் I ஆம் மற்றும் II ஆம் பகுதிகளுக்குத் தோற்றிய போதிலும் பரீட்சையின் I ஆம் மற்றும் II ஆம் பகுதிகளின் மொத்தங்களுக்கு அமைய கூடுதலான புள்ளி எண்ணிக்கையினைப் பெற்றவராகும். சமமான புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் ஒன்றை விட அதிகமாகவிருப்பின் அரச சேவை ஆணைக்குழுச் சபையினால் தீர்மானம் எடுக்கப்படும்.

2. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்**.- (i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2002.03.01 ஆந் திகதிய 1225/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களுக்கு அமைய இலங்கை கல்வி நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் அப்பிரமாணக் குறிப்பிற்கு இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களுக்கும் அரச சேவையின் நியமனத்தைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சார்த்திகள் சேவையின் III ஆம் வகுப்பிற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(ii) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டது. விதவைகள்/ தபுதாரர் அநாதைகள் ஓய்வூதியச் சம்பளத் திட்டத்திற்குப் பங்களிப்பு நிதியினைச் செலுத்துதல் வேண்டும்.

(iii) இப்பதவிக்கு நியமனம் பெறும் உத்தியோகத்தர் மூன்று (03) வருட கால தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுவதுடன் 03 வருடங் களுக்குள் முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(4) I have pasted the Cash deposit/ Cash transfer receipt obtained from Bank of Ceylon, drawn in favour of "Institute of Technology, University of Moratuwa - Account No. 0000308280 of Bank of Ceylon, Katubedde Branch".

(5) I also enclose a self-addressed stamped envelope (Rs. 40 worth) in size 9" x 4".

(6) I am aware that if I am found to be registered in another University or any other Higher Educational Institution under the Ministry of Education at the time of sitting for the Aptitude Test for the National Diploma in Technology Course, I will not be selected for the Course.

----,
Signature of Applicant.

Date :-----.

Paste your Cash Deposit/Cash Transfer Original Slip here.

4-731

## இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை-2013

இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2013 யூலை மாதம், கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதி 2013.05.31 ஆந் திகதியாகுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

2. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரி தனது விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப் படிவம் A4 அளவிலான கடதாசியில் மாத்திரமன்றி வேறு எந்தக் கடதாசியிலும் தயாரிக்கப்படலாகாது. இலக்கம் 01 தொடக்கம் 04(ii) வரையில் முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அதனை விண்ணப்பதாரர் தனது கையெழுத்துக்களினால் நிரப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படும்போது அங்கே தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப் படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் இல்லாத விண்ணப்பப்படிவங்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் பூர்த்தி செய்யப்படாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். மாதிரி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் சரியாக நிரப்புதல் வேண்டும்.

3. விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக (உதாரணமாக- பிரதேச செயலகங்களாயின் பிரதேச செயலாளரின் ஊடாக) 2013.05.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பத்தரமுல்லை, பெலவத்தை, ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரத்தின் போட்டோ பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமானதாக இருக்கும். பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் என்பதுடன் விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது. அரச கரும மொழிக் கொள்கை பற்றிய விடயம் தொடர்பாக புதிய பிரவேச உத்தியோகத்தர்களினால் தமது விண்ணப்பம் அரச கரும மொழியில் அல்லது தாம் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழியின் பிரகாரம் தமிழ் மொழியில் அல்லது ஆங்கில மொழியில் தயாரித்துச் சமர்ப்பிக்க முடியும்.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விண்ணப்பதாரி களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கால அட்டவணைப் பிரதியொன்றுடன் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய தற்கான பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு அப்பால் உள்ள பிரதேச மாயின் அனுமதி அட்டையை அனுப்பிவைக்கக்கூடிய தொலைநகல் இலக்கமொன்றையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றை உள்ளடக்கிய உங்களது வேண்டுகோள் கடிதத்தை இலங்கை பரீட்சை ஆணையாள ருக்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாகவிருக்கும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(iii) பூரணமான முகவரி ;
(iv) விண்ணப்பப் படிவம் தபாலில் இடப்பட்ட தபாற்கந்தோர், பதிவு செய்த இலக்கம் மற்றும் திகதி.

5. **ஆளடையாளம்.**- விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற எல்லா விடயங்களின்போதும் பரீட்சை மண்டப அதிபதிக்கு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கென கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடி யாகும் தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

மேற்கூறப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்ப தாரி ஒருவரின் பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச்செய்தல் அல்லது ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு பரீட்சைகள் ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

6. **பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சை விண்ணப்பதாரர்களிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும் :-

பரீட்சைக் கட்டணம் :

(அ) முதலாவது தடவைக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது ;
(ஆ) முதலாவது தடவையின் பின்னர் ஒவ்வொரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்காகவும் ரூபா 1,000.00 வீதம் அறவிடப்படும் ;
(இ) ஒரு விடயத்துக்கு ரூபா 500.00 அறவிடப்படும்.

உரிய பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளரின் வருமானத் தலைப்பு இல. 2003-02-13 இற்கு வரவிலிடப்படக்கூடியதாக நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப் படிவத்தில் உரிய இடத்தில் அதன் ஓரத்தைக் கழன்று போகாத வகையில் ஒட்டவும். பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதி யொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானதாக இருக்கும்.

7. இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப் படும் என்பதுடன் அவரினால் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுத்தப்படுவர். இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (II அ) யின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள ''பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்'' இப்பரீட்சைக்கும் உரித்துடையதாகும். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டப அதிபதிக்கு தங்களது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட பிரவேசப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டையொன்று வழங்கப்பட்டுள்ள தங்களது திணைக்கள/அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திணைக்கள/அலுவலக தலைவர்களினால் கடமை லீவு வழங்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவதுடன், பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை ஒன்றினை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதக்கூடாது.

9. இந்த ஒழுங்குவிதிகளில் உள்ளடங்காத ஏதேனும் விடயங்கள் தொடர்பாக நிதி மற்றும் திட்டமிடல் திணைக்களத்தின் செயலாளரின் தற்றுணிபின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தல் ஒவ்வொரு மொழியிலும் வெளியிடப்படும்போது யாதேனுமொரு ஒவ்வாமை காணப்படும் இடத்து சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

11. முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய விடயப்பரப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

**இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பாடத்திட்டம்**

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(i) திட்டமிடல் கொள்கைகள் மற்றும் விதிநுட்பங்கள், திட்டமிடல் நிறுவனங்கள் (பாட எண்-01) - 100 புள்ளிகள்
(ii) பொருளாதார பகுப்பாய்வு மற்றும் கணக்கிடல் (பாட எண்-02) - 100 புள்ளிகள்
(iii) கருத்திட்டங்களை திட்டமிடல், செயற்படுத்தல், பின்விபரம் செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் (பாட எண்-03) - 100 புள்ளிகள்
(iv) தாபன ஒழுங்குவிதி மற்றும் அரசாங்கத் துறையின் நிதி முறை (பாட எண்-04) - 100 புள்ளிகள்
(v) ஆங்கில மொழி அறிவு (பாட எண்-05) - 100 புள்ளிகள்

2. சேவை ஏற்பாடுகள் மற்றும் நியமனக் கடிதத்தின் விதிமுறைகளின் பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டுமென்பதுடன் ஒரே தடவையில் அனைத்துப் பாடங்களிலும் அல்லது பல்வேறு தடவைகளில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அனுமதி உண்டு.

3. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்கும் வழங்கப்படும் நேரம் 03 மணித்தியாலங்கள் ஆகும்.

4. வினாப்பத்திரத்தில் உள்ள எல்லா வினாக்களுக்கும் கட்டாயமாக விடையளித்தல் வேண்டும்.

5. சித்தி பெறுவதற்காக எல்லாப் பாடங்களிலும் 40% அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

பரீட்சைகள் ஒழுங்குவிதி.- முதலாவது வினாத்தாள்.- திட்டமிடல் எண்ணக்கருக்கள் மற்றும் முன்னுரிமைகள், விதிநுட்பங்கள், திட்டமிடல் நிறுவனங்கள் :-

(i) தேசிய குறிக்கோள்கள், முன்னுரிமைகள் மற்றும் அவற்றைச் சாத்தியப்படுத்திக் கொள்வதற்கான கொள்கைச் சட்டகம் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்.
(ii) தேசிய திட்டமிடலுக்கான விதி நுட்பங்கள், திட்டமிடலில் உள்ள பிரதான சிக்கலான இடங்கள், பொது மக்களின் ஒத்துழைப்பு வளங்களைப் பயன்படுத்தல் என்பன.
(iii) தேசிய திட்டமிடலுக்கான தரவுகளின் தன்மை மற்றும் மூலம், தரவுகள் சேகரித்தல், பொருள் கோடல்களைச் சமர்ப்பித்தல் மற்றும் பகுப்பாய்வு, துறை சார்ந்த பரிசோதனை மற்றும் ஆய்வு, பொது ஊடக எண்ணக்கரு, பொருளியல் ஆய்வு மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு.

***இரண்டாவது வினாத்தாள்***.- பொருளாதார பகுப்பாய்வு மற்றும் புள்ளிவிபரம் :

(i) உற்பத்தி மற்றும் விநியோகம் பற்றிய நியதிகள்மீது விசேட கவனத்துடன் பொருளியல் மூலதர்மங்கள்
(ii) பணம், வங்கி அமைப்பு, சர்வதேச நிதி அமைப்பு மற்றும் வியாபாரம்
(iii) நிதி, பணம், வியாபாரம் மற்றும் தீர்வை வரிக் கொள்கைப் பகுப்பாய்வு
(iv) இலங்கையில் பொருளாதாரக் கட்டமைப்பு
(v) பொருளாதார மீளாய்வு
(vi) கலைப் பயிற்சி மற்றும் பயிற்றப்படாத மனித சக்தி மற்றும் வெளிநாட்டு உதவி உட்பட்டதாக ஏனைய வளங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றைப் பயன்படுத்தல்.
(vii) பொருளாதார விஞ்ஞான மற்றும் சமூக ரீதியான நிகழ்வுகள்
(viii) பொருளாதார பகுப்பாய்வு மற்றும் திட்டமிடலில் பயன்படுத்தப்படும் ஆரம்ப கணக்கிடல் கொள்கைகள் மற்றும் திட்டங்கள்.
(ix) பயன் விளைவுகள்/செலவினப் பகுப்பாய்வு மூலதர்மங்கள்

***மூன்றாவது வினாத்தாள்***.- கருத்திட்டங்களைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல் மற்றும் பின்னூட்டல் :

(i) கருத்திட்டங்களைத் திட்டமிடல், இனங்காணல், பொருள் கோடல் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்கல், கொள்கைகள், சித்தாந்தம், இடத்தைத் தெரிவு செய்தல் தொழில்நுட்பம், செலவினம் மற்றும் பயன் விளைவுகள், மதிப்பீடு செய்தல் தொழில்நுட்ப நிதி மற்றும் பொருளாதார பகுப்பாய்வு.
(ii) கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு முறையாகவும் உரிய காலத்திலும் நடைமுறைப்படுத்தல், விரிவான செயற்பாட்டுத் திட்டங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தும் அட்டவணை தயாரித்தல், பின்விபரம் மற்றும் முன்னேற்ற நிர்வாகத்தை ஒன்றிணைத்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள்.
(iii) கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல், கருத்திட்டங்களிலும் நிகழ்ச்சித் திட்டங்களிலும் பயன் விளைவுகளை மதிப்பீடு செய்தல், செலவினங்களுடன் தொடர்புடையதாக பயன் விளைவுகளைப் பகுப்பாய்வு செய்தல்.

***நான்காவது வினாத்தாள்***.- தாபன ஒழுங்குவிதிகள் மற்றும் அரச துறையின் நிதி முறைமைகள் :

(i) அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள், தொகுதி I (X ஆம் அத்தியாயம் தவிர்ந்ததாக)
(ii) தாபன விதிக்கோவையின் அத்தியாயம் VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள், தொகுதி I முதல் VI வரையிலான அத்தியாயங்கள்

(iii) இலங்கையின் நிதி நிருவாகம்.- அரச முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரச நிதி சம்பந்தமான பாராளுமன்ற நிருவாகம், திரண்ட நிதியம் மற்றும் அதன் தொழிற்பாடு, ஒதுக்கீட்டின் குறிக்கோள்கள் மற்றும் ஒதுக்கீட்டு முறைமைகள், அரச வருமானம், நிதி அமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள், வொறண்ட் மற்றும் முற்பண அதிகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரது அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள், அரச செலவினக் குழு, அரச தொழில் முயற்சிகள் குழு.

(iv) கணக்கு உத்தியோகத்தர்கள், பிரதான கணக்கு உத்தியோகத்தர்கள் மற்றும் அரச வருமானங்கள் பற்றிய கணக்கு உத்தியோகத்தர்களையே நியமித்தல், அவர்களது பொறுப்புக்கள் மற்றும் கடமைகள்.

(v) அரச வருமானங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், அமைப்புக்களின் குறிக்கோள்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றினை இனங்காணல், வருடாந்த வருமானம் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதி தீர்மானங்களை மேற்கொள்ளல், அனுமதிக்கப்பட்ட செலவின மதிப்பீடுகளில் மாற்றங்களை மேற்கொள்ளல், அரச துறையின் பணியாட் டொகுதி முகாமைத்துவம், குறைநிரப்பு மதிப்பீடுகள்.

(vi) அரசாங்க வழங்கல் ஒழுங்குவிதிகள்.- பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளைப் பெற்றுக்கொள்ளல், வழங்கல் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் தன்மை, நியமனம், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள். விலைமதிப்பீட்டு ஒழுங்குவிதிகள், வெளிநாட்டு உதவிகள் மீது நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களின் முகாமைத்துவம்.

***ஐந்தாவது வினாத்தாள்.***- ஆங்கில மொழி.- திட்டமிடல், அபிவிருத்தி, திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் ஆகிய விடயங்களுடன் தொடர்புடையதான விண்ணப்பதாரர்களின் கல்வி மற்றும் தொழில்சார் ஆங்கில மொழித் திறன் பற்றி அளவிடுவதற்காக ஆங்கில மொழி பற்றிய எழுத்துமூல பரீட்சை ஒன்று நடாத்தப்படும்.

பீ. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2013, ஏப்பிறல் 26.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை - 2013**

[ ]
அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

(விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்கள் பின்னால் இடப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
உ-ம் SILVA B.A

1.2 முழுப் பெயர் (சிங்களத்தில், தமிழில்) :----.

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் எழுதவும்) : ----.

2.1 அலுவலக முகவரி (சிங்களத்தில், தமிழில்) :----.

2.2 அனுமதிப்பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

3. 3.1 பால் :

பெண் - 0
ஆண் - 1 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.3 விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. வர்த்தமானி அறிவித்தலின் 11 ஆவது பந்தியின் கீழ் தோற்றும் பாடங்கள் :

| பாடம் | பாட எண் |
|---|---|
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |

5. இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III இல் சேர்ந்த திகதி : ----.
(சரியாக கடமையினைப் பொறுப்பேற்ற திகதியினைக் குறிப்பிடுதல் வேண்டும்)

6. அரச மொழிகள் கொள்கை தொடர்பாக பழைய நுழைவாளர் ஒருவரா அல்லது புதிய நுழைவாளர் ஒருவரா ? :----.

7. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகம் ஒன்றாயின் அந்த அலுவலகத்தின் பெயர்) :----.

8. பரீட்சைக்குத் தோற்றுவது முதலாவது தடவையா ? :----.

9. பரீட்சைக்குத் தோற்றுவது முதலாவது தடவை அல்லாவிடில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்-

| |
|---|
| பற்றுச்சீட்டினை கழன்று போகாமல் நன்றாக ஒட்டவும். (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்று வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும்) |

10. மேலே குறிப்பிட்டுள்ள விடயங்கள் சரியானவைகள் என்பதையும் மேற்குறிப்பிடப்பட்ட மொழியில் பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரித்துள்ளதென்பதையும் உறுதிமொழிகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் இணங்குகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் முன்னிலையில், தமது பிரதேச தலைவரின் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் உத்தியோகத்தரொருவராகிய, எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமுள்ள திரு./திருமதி/செல்வி .................................. அவர்கள் .......................... ஆம் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்களைப் பரீசித்துப் பார்த்தேன் எனவும் அவை சரியானவை எனவும் ;

(ii) விண்ணப்பதாரி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியானவர் எனவும்

சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோக முத்திரையிடவும்).

பதவிப் பெயர் :----.
திகதி :----.

4-838/1

---

**இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சை-2013**

இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2013 யூலை மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதி 2013.05.31 ஆந் திகதியாகுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

2. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. அந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரி தனது விண்ணப்பப்படிவத்தைத் தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவம் A4 அளவிலான கடதாசியில் மாத்திரமன்றி வேறு எந்தக் கடதாசியிலும் தயாரிக்கப்படலாகாது. இலக்கம் 01 தொடக்கம் 04(ii) வரையில் முதலாம் பக்கத்திலும் ஏனையவை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அதனை விண்ணப்பதாரர் தனது கையெழுத்துக்களினால் நிரப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படும்போது அங்கே தலைப்பில் குறிப்பிடப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப் படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் இல்லாத விண்ணப்பப்படிவங்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் மற்றும் பூரணமற்ற தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். மாதிரி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் சரியாக நிரப்புதல் வேண்டும்.

3. விண்ணப்பப்படிவங்கள் தமது திணைக்களத் தலைவரின் ஊடாக (உதாரணமாக- பிரதேச செயலகங்களாயின் பிரதேச செயலாளரின் ஊடாக) 2013.05.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பத்தரமுல்லை, பெலவத்தை, ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பப்படிவம் இடப்படும் கடித உறையின் இடது மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமானதாக இருக்கும். பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் என்பதுடன் விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்படமாட்டாது. அரச கரும மொழிக் கொள்கை பற்றிய விடயம் தொடர்பாக புதிய பிரவேச உத்தியோகத்தர்களினால் தமது விண்ணப்பம் அரச கரும மொழியில் அல்லது தாம் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட மொழியின் பிரகாரம் தமிழ் மொழியில் அல்லது ஆங்கில மொழியில் தயாரித்துச் சமர்ப்பிக்க முடியும்.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விண்ணப்பதாரி களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கால அட்டவணைப் பிரதியொன்றுடன் அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டவுடன் அதுபற்றி குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்த லொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப் படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய தற்கான பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு அப்பால் உள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்பிவைக்கக்கூடிய தொலைநகல் இலக்கமொன்றையும்

குறிப்பிட்டு உங்களது வேண்டுகோள் கடிதத்தை இலங்கை பரீட்சை ஆணையாளருக்கு அறிவிப்பது மிகவும் பயனுள்ளதாகவிருக்கும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) விண்ணப்பதாரியின் முழுப்பெயர் ;
(iii) பூரணமான முகவரி ;
(iv) விண்ணப்பப் படிவம் தபாலில் இடப்பட்ட தபாற்கந்தோர், பதிவு செய்த இலக்கம் மற்றும் திகதி.

5. **ஆளடையாளம்**.- விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற எல்லா விடயங்களின்போதும் பரீட்சை மண்டப அதிபதிக்கு தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். இதற்கென கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களிடையே ஒன்று மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

மேற்கூறப்பட்ட ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க இயலாத விண்ணப்பதாரி ஒருவரின் பரீட்சார்த்தித் தன்மையை நிராகரித்தல் அல்லது ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு பரீட்சைகள் ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.

6. **பரீட்சைக் கட்டணம்**.- இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சை விண்ணப்பதாரர்களிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும் :-

பரீட்சைக் கட்டணம்-

(அ) முதலாவது தடவைக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது ;
(ஆ) முதலாவது தடவையின் பின்னர் ஒவ்வொரு வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்காகவும் ரூபா 1,000.00 வீதம் அறவிடப்படும் ;
(இ) ஒரு பாடத்துக்கு ரூபா 500.00 அறவிடப்படும்.

உரிய பரீட்சைக் கட்டணம் பரீட்சைகள் ஆணையாளரின் வருமானத் தலைப்பு இல. 2003-02-13 இற்கு வரவிலிடப்படக்கூடியதாக நாட்டிலுள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலேனும் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் அதன் ஓரத்தைக் கழன்று போகாத வகையில் ஒட்டவும். பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்று தம்மிடம் வைத்துக்கொள்ளல் பிரயோசனமானதாக இருக்கும்.

7. இப்பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்படும் என்பதுடன் அவரினால் பரீட்சை நடாத்தப்படுதல் தொடர்பாக விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சை விண்ணப்பதாரிகள் உட்படுத்தப்படுவர். இந்த வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (II அ) இன் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ள "பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்" இப்பரீட்சைக்கும் உரித்துடையதாகும். பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டப அதிபதிக்கு தங்களது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்ட பிரவேசப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

8. இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை உள்ள மற்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டையொன்று வழங்கப்பட்டுள்ள தங்களது திணைக்கள/அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு திணைக்கள/அலுவலக தலைவர்களினால் கடமை லீவு வழங்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை அனுப்பிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவதுடன், பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை ஒன்றினை வழங்குதலானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளாரென ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதக்கூடாது.

9. இந்த ஒழுங்குவிதிகளில் அடங்கியில்லாத ஏதேனும் விடயமொன்று இருப்பின் நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரின் தற்றுணிபின்படி அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

10. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகின்ற இந்த அறிவித்தல் ஒவ்வொரு மொழியிலும் வெளியிடப்படும்போது யாதேனுமொரு ஒவ்வாமை காணப்படுமிடத்து சிங்கள மொழியில் வெளியிடப்படும் அறிவித்தலே வலுப்பெறும்.

11. இரண்டாவது வினைத்திறன் காண் தடைப் பரீட்சையுடன் தொடர்புடைய விடயப்பரப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

**இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் பாடத்திட்டம்**

இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

(i) அபிவிருத்தி திட்டமிடல் தொழில்நுட்ப முறைகள் (பாட எண்-06) - 100 புள்ளிகள்
(ii) அடிப்படைப் பெரும்பாக பொருளியல் விஞ்ஞானம் (பாட எண்-07) - 100 புள்ளிகள்
(iii) நடைமுறை சர்வதேச பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றின்மூலம் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் (பாட எண்-08) - 100 புள்ளிகள்

2. சேவை ஏற்பாடுகள் மற்றும் நியமனக் கடிதத்தின் விதிமுறைகளின் பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சைகளில் சித்தியடைதல் வேண்டுமென்பதுடன், அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே முறையில் அல்லது தனித்தனியாக பல தடவைகளில் தோற்றுவதற்கு உத்தியோகத்தர்களுக்கு அனுமதி உண்டு.

3. ஒவ்வொரு வினாத்தாளுக்குமான காலம் 03 மணித்தியாலங்கள் ஆகும்.

4. வினாத்தாளில் உள்ள சகல வினாக்களுக்கும் விடையளித்தல் கட்டாயமானதாகும்.

5. சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு வினாத் தாளிலிருந்தும் 40% புள்ளிகளை அல்லது அதிலும் கூடுதலாக விண்ணப்பதாரர்கள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**பரீட்சை ஒழுங்கு நடவடிக்கை முறை**

(i) அபிவிருத்தி திட்டமிடல் நுட்பங்கள்

(அ) 'ஸ்வொட்' பகுப்பாய்வு
(ஆ) பிணக்கு மரம்
(இ) தர்க்க சட்டக பகுப்பாய்வு
(ஈ) செலவினம் - நன்மை பகுப்பாய்வு
(உ) செலுத்தல் முறைமை
(ஊ) தேறிய தற்போதைய பெறுமதி
(எ) உள்ளக நன்மை விகிதம்
(ஏ) நிழல் விலையினை பயன்படுத்தல்

(ii) அடிப்படைப் பெரும்பாக பொருளாதார விஞ்ஞானம்

(அ) தேறிய கணக்குகள்
(ஆ) பொருளாதார விருத்தி வேகம்
(இ) ஏற்றத்தாழ்வற்ற தேறிய வருமானம்
(ஈ) பெருக்க எதிர் விளைவுகள்
(உ) பண வீக்கம்
(ஊ) வட்டி வீதம்
(எ) அரச நிதிக் கொள்கைகள் பற்றிய அறிமுகம்
(ஏ) நிதிக் கொள்கைகள் பற்றிய அறிமுகம்
(ஐ) சந்தை சக்கரம்

(iii) நடைமுறை சர்வதேச பொருளாதார பிரச்சினைகள் மற்றும் அவற்றின் மூலம் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள்.

(அ) நடைமுறை சர்வதேச பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் அவற்றின் மூலம் இலங்கைப் பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய தாக்கங்கள் (அந்தந்த சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய உலகப் பொருளாதார நிலைகளுக்கு நடைமுறையில் பொருத்தமான தலைப்பின் ஊடாகப் பதிலழிக்க வேண்டி ஏற்படும்)

பீ. பி. ஜயசுந்தர,
செயலாளர்,
நிதி, திட்டமிடல் அமைச்சு.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 1,
2013, ஏப்பிறல் 26.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான இரண்டாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை - 2013**

[ ]
அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் நகரம் மற்றும் நகர இலக்கம் : [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

(விண்ணப்பித்த மொழி பின்னர் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது)

1. பெயர் :-

1.1 முதலெழுத்துக்கள் பின்னால் இடப்பட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.
உ-ம் SILVA, B.A

1.2 முழுப் பெயர் (சிங்களத்தில், தமிழில்) :----.

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில் எழுதவும்) : ----.

2.1 அலுவலக முகவரி (சிங்களத்தில், தமிழில்) :----.

2.2 பிரவேசப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :----.

3. 3.1 பால் :

பெண் - 1
ஆண் - 0 [ ]
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

3.3 விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

4. வர்த்தமானி அறிவித்தலின் 11 ஆவது பந்தியின் கீழ் தோற்றும் பாடங்கள் :

| பாடம் | பாட எண் |
|---|---|
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |
| ................................ | ................................ |

5. இலங்கை திட்டமிடல் சேவையின் தரம் III இல் சேர்ந்த திகதி : ----.
(சரியாக கடமையினைப் பொறுப்பேற்ற திகதியினைக் குறிப்பிடு தல் வேண்டும்)

6. அரச மொழிகள் கொள்கை தொடர்பாக பழைய நுழைவாளர் ஒருவரா அல்லது புதிய நுழைவாளர் ஒருவரா ? :----.

7. திணைக்களத்தின் பெயர் (பிரதேச செயலகம் ஒன்றாயின் அந்த அலுவலகத்தின் பெயர்) :----.

8. பரீட்சைக்குத் தோற்றுவது முதலாவது தடவையாகவா? :----.

9. பரீட்சைக்குத் தோற்றுவது முதலாவது தடவையாக அல்லாவிடில் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம்-

பற்றுச்சீட்டினை கழன்று போகாமல் நன்றாக ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்று வைத்திருத்தல் பிரயோசனமாக இருக்கும்)

10. மேலே குறிப்பிட்டுள்ள விடயங்கள் சரியானவைகள் என்பதையும் மேற்குறிப்பிடப்பட்ட மொழியில் பரீட்சைக்குத் தோற்ற எனக்கு உரித்துள்ளதென்பதையும் உறுதிமொழிகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் இணங்கு கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- தமது திணைக்களத் தலைவர் அல்லது திணைக்களத் தலைவருக்குப் பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் முன்னிலையில், தமது பிரதேச தலைவரின் முன்னிலையில் விண்ணப்பதாரி கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தின் உத்தியோகத்தரொருவராகிய, எனக்கு தனிப்பட்ட முறையில் அறிமுகமுள்ள திரு./திருமதி/செல்வி .................................. அவர்கள் ......................... ஆந் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றுரை**

(i) மேலே தரப்பட்டுள்ள விபரங்களைப் பரீட்சித்துப் பார்த்தேன் எனவும் அவை சரியானவை எனவும்

(ii) விண்ணப்பதாரி இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியான வர் எனவும்

உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோக முத்திரையிடவும்).

பதவிப் பெயர் :----.
திகதி :----.

4-838/2

---

**அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

## இலங்கை பொறியியலாளர் சேவையின் வகுப்பு II இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

இலங்கைப் பொறியியலாளர் சேவையின் வகுப்பு II இன் தரம் II இலுள்ள குடியியல் மற்றும் மின்னியல் பொறியியலாளர் பதவிகளின் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகைமைபெற்ற இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இலங்கைப் பொறியியலாளர் சேவையின் (இதனகத்துப் பின்னர் ''சேவை'' என அழைக்கப்படும்.) பதவிகளை எதிர்பார்க்கும் தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளின் ஆற்றல்களை முறையாக உறுதிப்படுத்தும் நோக்குடன் இப்பரீட்சை 2013, ஓகத்து மாதத்தில் அல்லது/ எதிர்வரும் தினமொன்றில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கொழும்பில் நடத்தப்படும். விண்ணப்பதாரி ஒருவருக்கு விரும்பிய ஏதேனுமோர் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்பதோடு விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலம் பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

3. இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு நியமன அதிகாரத்தைக் கொண்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

4. இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2013.05.27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவிதமாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்ல" எனும் முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்படும் உறையின் இடதுபுற மேல் மூலையில் "இலங்கைப் பொறியியலாளர் சேவையின் வகுப்பு II இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013" எனத் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**கவனிக்க**.- (I) மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கிணங்க தயாரிக்கப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவமோ அதனுடன் தொடர்பான ஆவணமோ தபாலில் காணாமற்போனதாகவோ தாமதமாகியதெனவோ முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் தினம்வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய இழப்புகளை விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

(II) அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணிபுரியும் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தமது திணைக்களத் தலைவரூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **தகைமைகள்** :

5.1 இப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற பரீட்சார்த்தியொருவர்.-

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கைப் பல்கலைக் கழகமொன்றில் மேற்படி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நான்கு வருடகால முழுநேர விஞ்ஞான பொறியியல் பட்டப் பாடநெறியொன்றினை, நியமனத்தைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் பொறியியலாளர் வகைக்குரிய விடயப்பரப்பின்கீழ் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து பட்டத்தினைப் பெற்றிருக்க வேண்டும் ;

அல்லது

(ii) 5.1(i) இல் காட்டப்பட்டுள்ள பட்டப் பாடநெறிக்குச் சமனானதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இலங்கைப் பொறியியலாளர் நிறுவனம் என்பவற்றினால் ஏற்றுக்கொள்ளப்படும் பாடநெறியொன்றினைக் கற்றிருத்தல் மற்றும் நியமனம் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் பொறியியலாளர் வகைக்கேற்ப உரிய விடயப்பரப்பின்கீழ் ஏனைய சகல தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருத்தல் அத்தோடு அவற்றை உறுதிப்படுத்துவதற்காக செல்லுபடியாகும் சான்றிதழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு**.- மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

5.2 ***வேறு தகைமைகள்***.-

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர்கள் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் எனும் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியன்று, அவர் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

(iii) சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் கடமை புரிவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் எல்லா வகையிலும் உடலியல் ரீதியாகத் தகைமை பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) விண்ணப்பதாரர்கள் சிறந்த நடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும் ;

(v) மேலே குறிப்பிடப்பட்ட 5.1 இன்கீழ் காட்டப்பட்டுள்ள தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களை வழங்குவதற்கு ஏதுவாய் அமைந்த விளக்கமான பெறுபேற்று ஆவணங்களில் (Academic transcript) உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள், ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பொறியியலாளர் வகைக்குரிய தேவைப் பாடுகளுடன் எல்லா வகையிலும் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும் ;

(vi) வயது.- ஆகக்குறைந்த வயதெல்லை 21 வருடங்கள், ஆகக்கூடிய வயதெல்லை 35 வருடங்கள் ;

எவ்வாறாயினும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று உடன் முன்னரான சேவையில்- பதவியில் 5 வருடகால திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ள அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் பணிபுரியும் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் ஒருவருக்கு (அதாவது இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர் ஒருவருக்கு, நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவிப் பொறியியலாளர் உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது புகையிரதத் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவச் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவருக்கு) ஆகக்கூடிய வயதெல்லை 45 வருடங்கள் ஆகும்.

**குறிப்பு**.- மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியாகும் போது எல்லா வகையிலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

6. ***மாதாந்த சம்பள அளவுத் திட்டம்***.- உரிய சம்பளப் படிநிலைகளில் வினைத்திறன் காண் தடைகள் சகிதம் ரூபா 22,935-10×645-8×790-17×1,050-ரூபா 53,555 எனும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் (அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06-2006 இற்கேற்ப எஸ்எல் 1-2006 சம்பள அளவுத்திட்டம்) இப்பதவிக்கு உரியதாகும். எவ்வாறாயினும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் முன்னைய தொழில்சார் தகைமைகள் (பட்டயப் பொறியியலாளர் நிலைமை) பெற்றுள்ள அல்லது ஆட்சேர்ப்பின் பின்னர் முன்னைய தொழில்சார் தகைமைகளைப் பெற்றிருக்கும் பொறியியலாளர் சேவையின் வகுப்பு II இன் தரம் II இற்கு உரிய ஐந்தாவது (05) சம்பளப் படிமுறையில் வைக்கப்படுவீர்.

நியமனத் திகதியிலிருந்து 3 வருடகாலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடையில் சித்தியடைதல் வேண்டும்.

7. **சேவை நிபந்தனைகள்**.- (i) அரச சேவை நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 509-07 ஆம் இலக்க மற்றும் 1988, யூன் மாதம் 7 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட இலங்கை பொறியியலாளர் சேவைப்பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், மேற்படி சேவைப் பிரமாணக் குறிப்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள இதனகத்துகப் பின்னர் மேற்கொள்ளப்படக்கூடிய திருத்தங்களுக்கும் உட்பட்டதாக தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி யொருவர் சேவையின் வகுப்பு II இன் தரம் II இற்கு நியமிக்கப்படுவர்.

(ii) நியமனம்பெற்று 5 வருட காலத்திற்குள் 2007, மே மாதம் 28 ஆந் திகதிய 07/2007 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரச கரும மொழிகள் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iii) இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதிய உரித்துடையது. நியமனம் பெற்றவர்கள் விதவைகள்/விதுரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும். மூன்று ஆண்டுகால தகுதிகாண் நிலைக்காலத்திற்கு உட்பட்டதாகவே நியமனம் வழங்கப்படும்.

(iv) நியமனம் பெற்றவர்கள் தீவில் விக்கப்படுகின்ற எப்பிரதேசத்திலும் கடமைக்காகச் சமுகமளித்திடல் வேண்டும் ;

(v) நியமனம் பெற்றவர்கள் அரச சேவையிற் போன்று, மாகாண அரச சேவையிலும் கடமையாற்றுவதற்கு கடப்பாடு உடையவராவர் ;

(iv) தமக்கு வழங்கப்படும் பதவியில் கடமைகளை உரிய தினத்தில் பொறுப்பேற்கத் தவறும் அல்லது நியமிக்கப்பட்ட பதவியில் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளையேற்பதற்கு மறுக்கும் அல்லது கடமையேற்கப் புறக்கணிக்கும் நியமனதாரர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யப்படும் ;

(vii) இலங்கைப் பொறியியலாளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரத்திலிருந்து அடுத்த தரத்திற்கு

பதவியுயர்வு பெறுவதற்காக முன்னைய தொழில்சார் தகைமைகளைப் பெற்றிருத்தல் கட்டாயத் தேவையாகும்.

*8.* ***விண்ணப்பிக்க வேண்டிய முறை***.- (i) விண்ணப்பப்படிவம், பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்குக் கருதும் மொழி மூலமே முழுமையாகப் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்ட பரீட்சையின் பெயர், சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு எண்கள் 1.0 தொடக்கம் 4.0 வரை முதலாம் பக்கத்திலும், 5.0 தொடக்கம் 6.0 வரை இரண்டாம் பக்கத்திலும், 7.0 தொடக்கம் 10.0 வரை மூன்றாம் பக்கத்திலும் தலைப்பிலக்கம் 11 நான்காம் பக்கத்திலும் அமையக்கூடிய விதத்தில் ஏ4 அளவுக் கடதாசியில் தயாரித்து, அதனுடன் தொடர்பான தகவல்கள் தனது சொந்தக் கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். தன்னால் பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம், இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பதை விண்ணப்பதாரர் தாமே உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துடன் ஒத்துப்போகாத மற்றும் முழுமையற்ற விதத்தில் தகவல்கள் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதி ஒன்றைக் கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

(ii) விண்ணப்பப்படிவத்தில் பரீட்சார்த்தியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் உயர் அத்தியட்சகர் பதவியிலுள்ள ஒருவர், பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்டு பதவி வகிக்கும் அலுவலர் ஒருபவரினால் அல்லது ரூபா 2,40,360 இற்கு கூடிய அடிப்படை ஆண்டுச் சம்பளம் பெறும், அரசாங்க நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது ;

(iv) விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்ட பின்னர், உடனடியாக அதனைக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாவிடின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தம்வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் பதிவுத்தபால் செய்த பற்றுச்சீட்டினையும் கொழும்பிற்கு வெளியேயான பிரதேசமாயின் அனுமதிப்பத்திரத்தினைத அனுப்புவதற்குரிய தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தினையும் குறிப்பிட்டு உங்கள் கோரிக்கைக் கடிதத்தினையும் உடன் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்துதல் மிகவும் பயனளிக்கும்.

*9.* ***பரீட்சைக் கட்டணம்***.- பரீட்சைக்கான கட்டணம் ரூபா 1,000 ஆகும். விண்ணப்பப்படிவம் ஏற்கப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர், எந்தவொரு மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பரீட்சைக் கட்டணம், வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வரவு வைக்கப்படுவதற்காகச் செலுத்தப்படுதல் வேண்டும். மாவட்டச் செயலாளர்/பிரதேச செயலாளர் அலுவலகம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் பிரதி விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் நல்ல முறையில் ஒட்டப்படுதல் வேண்டும். இக்கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது. விதிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணம் மேற்குறிப்பிடப்பட்டவாறு செலுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் நிழற் பிரதியொன்றைக் கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும்.

*10.* ***பரீட்சை வழிமுறை***.- பரீட்சை 100 புள்ளிகள் கொண்ட எழுத்துருவிலான கிரகித்தல் பரீட்சை ஒன்றுக்கு மட்டுப்படுத்தப்படும். மேலே 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையொன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக பொறியியல் விஞ்ஞானப் பாடத்தினைக் கற்பதன் ஊடாகப் பெறப்பட்ட அறிவின் மீது விண்ணப்பதாரியின் சிந்தனை செய்யும் ஆற்றல், தர்க்கிக்கும் ஆற்றல், அவரின் மனதில் பகுப்பாய்வுத் திறமைகள், தீர்மானமெடுக்கும் திறமைகளைப் பற்றி தீர்மானிப்பதை இலக்காகக் கொண்டு இப்பரீட்சை வினாப்பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது. பரீட்சை வினாப்பத்திரம் பல்தேர்வு மற்றும் சுருக்க விடைகளை வழங்கும் வகையிலான வினாக்களைக் கொண்டுள்ளதுடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். அதற்கு 1 1/2 மணித்தியாலங்கள் வழங்கப்படும். மேற்படி பரீட்சையில் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புப் படிமுறை தீர்மானிக்கப்படும்.

*11.* ***பரீட்சைக்கு அனுமதித்தல்***.- (I) உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, உரிய முறையில் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்துள்ள, குறித்த தினத்திற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரர் பரீட்சை மண்டபத்தில், பரீட்சை மண்டப பிரதானிக்கு தமது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதிச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வனுமதிச் சீட்டைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரியொருவருக்குப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது.

(II) பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு விதிக்கப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். எல்லாப் பரீட்சார்த்திகளும் உரிய பரீட்சையுடன் தொடர்பான அனுமதிச்சீட்டைத் தொடக்கத்திலேயே அப்பரீட்சைக்குத் தோற்றும் நாளில் அங்கு பரீட்சை மண்டப அதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகளினால் பின்பற்றப்படவேண்டிய சட்டதிட்ட விதிகள் தொகுப்பொன்று இவ்வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சை நடாத்துவது தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்குப் பரீட்சார்த்திகள் உட்பட்டவர்களாவர். இச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளரினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்படவேண்டி வரும்.

***குறிப்பு***.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட எல்லாத் தகைமைகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்ற ஊகத்தின் அடிப்படையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படும். விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகுதிகளைப் பூரணப்படுத்தியுள்ளமைக்கான சான்றாகக் கணிக்கப்படலாகாது.

*12.* ***பரீட்சார்த்தியின் அடையாளம்***.- தான் தோற்றுகின்ற பரீட்சை தொடர்பில், பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இதற்காகப் பின்வரும் ஏதேனும் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு (பாஸ்போட்).

*13.* **பொய்யான தகவல்களை வழங்குதல்.**- பரீட்சார்த்தி ஒருவர் தகுதியற்றவர் எனக் கண்டுபிடிக்கப்படின் அவரது பரீட்சார்த்தத் தன்மை, பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலப்பகுதியில் அல்லது பரீட்சையின் பின்னர் இரத்துச்செய்யப்படலாம். பரீட்சார்த்தி சமர்ப்பித்துள்ள தகவல்கள் பொய்யானவை எனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்துள்ளார் எனக் கண்டுபிடிக்கப்படின் அன்றேல் ஏதும் முக்கியமான ஒரு விடயம் வேண்டுமென்றே மறைத்து இருப்பின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

*14.* **நியமனம் செய்வதற்காகத் தெரிவுசெய்யப்படும் முறை.**- போட்டிப் பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த் திகளின் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக கீழ்வரும் வழிமுறைகள் பின்பற்றப்பட்டு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

(i) ஆகக்குறைந்த வெற்றிடங்களின் எண்ணிக்கையினைப் போன்று இரு மடங்கிற்கு ஒத்த எண்ணிக்கையுடையோர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.

(ii) அரச சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழு ஒன்றினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும் என்பதுடன், இங்கு பரீட்சார்த்திகளின் சான்றிதழ்கள் பரீட்சிக்கப்படும்.

(iii) பரீட்சார்த்தியொருவரினால் சமர்ப்பிக்கப்படும் சகல ஆவணங்களும்/ சான்றிதழ்களும் எல்லா வகையிலும் செல்லுபடியானவையாக இருத்தல் வேண்டும். உரிய அதிகாரமளிக்கப்பட்டவரின் கூற்று இல்லாமல் சமர்ப்பிக்கப் படும் எந்தவொரு ஆவணமும் அல்லது சான்றிதழும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

(iv) மேலே 14 (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லாச் செல்லுபடியாகும் ஆவணங்களும்/சான்றிதழ்களும் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(v) நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

(vi) பரீட்சார்த்திகள் சிலர் சமமான புள்ளிகளைப் பெற்றிருப்பின் அத்தகைய சந்தர்ப்பங்களில் பொருத்தமான தீர்மானத்தை மேற்கொள்ளுதல், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படுவதுடன், அது இறுதியான முடிவாக இருக்கும்.

*15.* பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் பெறுபேற்றினை வெளியிடுவதற்கு பொருத்தமான தினம் அறிவிக்கப்பட்டதன் பின்னர், பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரர்களுக்கும் எழுத்துமூலப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் பதியப்பட்ட பெறுபேற்று அட்டையை அனுப்புவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

*16.* நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் செய்யப் படும் திகதியும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். ஏதும் வெற்றிட எண்ணிக்கை அல்லது எல்லா வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்கவும் இங்கு பிரமாணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிராத விடயங்கள் தொடர்பாக முடிவுகள் மேற்கொள்வ தற்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களுக்கிடையே ஏதும் பொருத்தமின்மை இருப்பின், அப்போது சிங்கள மொழிப் பிரயோகம் வலுவுடையதாக இருக்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிருவாக, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2013.

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பொறியியலாளர் சேவையின் வகுப்பு II இன் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2013**

(OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT ENGINEERS TO THE GRADE II OF CLASS II OF THE SRI LANKA ENGINEERING SERVICE - 2013)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :

| | |
|---|---|
| சிங்களம் | 2 |
| தமிழ் | 3 |
| ஆங்கிலம் | 4 |

(தொடர்பான இலக்கத்தை கூண்டினுள் எழுதுக.)

விண்ணப்பிக்கும் குழு :

| | |
|---|---|
| குடியியல் | 1 |
| இயந்திரவியல் | 2 |
| மின்னியல் | 3 |

(தொடர்பான இலக்கத்தை கூண்டினுள் எழுதுக.)

1. பெயர் :-

1.1 முதல் எழுத்தை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் :----.
(ஆங்கில மூல எழுத்துக்களில்) உதாரணம் :- SILVA, A. B.

1.2 முதலெழுத்துக்களினால் குறிப்பிடும் பெயர் :----.
(ஆங்கில மூல எழுத்துக்களில்)

1.3 முழுப்பெயர் :----.
(தேசிய அடையாள அட்டையில் உள்ள மொழியில்)

2. தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. 3.1 நிரந்தர முகவரி (ஆங்கில மூல எழுத்தில்) :----.

3.2 அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில மூல எழுத்தில்) :----.

3.3 தொலைபேசி இலக்கம் :- நிலையானது :----.
கையடக்கத் தொலைபேசி :----.

3.4 தபால் நகரம் :----.

3.5 மின்-அஞ்சல் :----.

4. 4.1 இன வர்க்கம் :-
(சிங்களவர் - 1, தமிழர் - 2,
இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4,
ஏனையவை - 5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

4.2 பால் (ஆண்/பெண்) :-
(ஆண் - 0, பெண் - 1)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

4.3 திருமணமானவர்/திருமணமாகாதவர் :-
(திருமணமாகாதவர் - 1, திருமணமானவர் - 2)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

4.4 பிறந்த திகதி :-

ஆண்டு : மாதம் : திகதி :

4.5 விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதி நாளன்று வயது :-

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

5. 5.1 கல்வித் தகைமைகள் :-

(i) பட்டம் அல்லது வர்த்தமான அறிவித்தலில் குறிப்பிடப் பட்ட தகைமைகள் வலிதுடையதாகும் திகதி :-----.

(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :-----.

(iii) பதிவு இலக்கமும் திகதியும் :-----.

(iv) பட்டக் கற்கைநெறியின் பெயர் (உதாரணம் : விஞ்ஞானப் பொறியியலாளர் BSc Engineering) : -----.

(v) கற்கைநெறி (உதாரணம் : குடியியல், எந்திரனியல், மின் உற்பத்தி) :-----.

(vi) பட்டம் அல்லது வர்த்தமானப் பத்திரிகையின் 5.1 (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்த ஆண்டு :-----.

(vii) இறுதியாண்டின் விடயங்கள் :-----.

(viii) பரீட்சைக்குத் தோற்றிய மொழிமூலம் :-----.

5.2 உயர் தொழில் தகைமைகள் (பெற்றிருப்பின்) (உதாரணம் - MICE, MIE) :-----.

6. தற்போது வகிக்கும் பதவியும் முன்னர் வகித்த பதவியும் இருப்பின் அது பற்றிய விபரம் :-----.
(சேவையில் சேர்ந்த திகதியும் அகன்ற திகதியும் அல்லது ஒதுங்கு வதற்கான காரணங்களும் குறிப்பிடப்படுதல் வேண்டும்)

6.1 பதவி :-----.

6.2 திணைக்களம்/நிறுவனம் :-----.

6.3 நியமனத் திகதி :-----.

6.4 நிரந்தரமானது/ஓய்வூதிய உரித்துடையது/ஓய்வூதியம் அற்றது அல்லது தற்காலிகமானதா எனும் விபரம் :-----.

6.5 பதவி நிரந்தரமாக்கப்பட்டுள்ளதா எனும் விபரம் :-----.

6.6 பதவியின் சம்பள அளவு, இப்போது கிடைக்கும் சம்பளமும் : -----.

6.7 முன்பு வகிக்கப்பட்ட பதவி பற்றிய விபரங்கள் :-----.

6.8. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமோர் பதவியினை வகிக்கும்போது நீங்கள் ஏதேனும் குற்றவியல் தவறுகளுக்காக எப்போதாயினும் நீதிமன்றத்தில் குற்றவாளியாகியிருக் கின்றீரா? அவ்வாறாயின் அக்குற்றம் மற்றும் கிடைத்த தண்டனை பற்றிய விபரங்களைத் தருக :----.

7. ஏதேனுமோர் குற்றவியல் தவறுக்காக எப்போதாவது நீதிமன்ற மொன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் அக் குற்றம் மற்றும் கிடைத்த தண்டனை பற்றிய விபரங்களைத் தருக : ----.

8. பணப்பற்றுச்சீட்டு அகலாத விதத்தில் ஒரு பக்கத்தில் நல்ல முறையில் ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதி ஒன்றைத் தம்மிடம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்) :

பற்றுச்சீட்டு இலக்கம் :-----.
செலுத்திய அலுவலகம் :-----.
திகதி :-----.

9.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை** :

இவ்விண்ணப்பப்படிவத்தில் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் உண்மையானவையென்றும் சரியானவையென்றும் இத்தால் உறுதியுரைக்கின்றேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதும் விபரம் உண்மையற்றது என அல்லது பிழையானவையென நான் தெரிவுசெய்யப்படமுன்னர் கண்டுபிடிக்கப்பட முடியுமெனின் அதன் காரணமாக நான் இப்பதவிக்குத் தகுதியற்றுப் போவதற்கும், இப்பதவிக்கு நான் நியமிக்கப்பட்ட பின்னர் அத்தவறு கண்டுபிடிக்கப்படின் எந்தவிதமான இழப்பீடுமின்றி நான் பதவி நீக்கம் செய்யப்படுவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும், பரீட்சையினை நடாத்துவது தொடர்பாகவும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகத் தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் நான் கீழ்ப்படிவேன் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்** :
(வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 8 (ii) இன்படி இருத்தல் வேண்டும்)

இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் (முழுப் பெயர்) திரு./ திருமதி/ செல்வி ..................................................................
என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும் என்றும் பணம்

செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும் ......................... ஆந் திகதியன்று அவரது கையொப்பம் என் முன்னிலையில் வைக்கப்பட்டதென்றும் நான் உறுதிப்படுத்து கின்றேன்.

-----,
கையொப்பத்தினை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்.)
திகதி :-----.

11. **விண்ணப்பதாரர் அரச சேவையில் உள்ளவரெனின் திணைக்களத் தலைவரின் அறிக்கை :**

இவ்விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் (முழுப் பெயர்) ........................... என்பவரை தனிப்பட்ட முறையில் தெரிந்தவரென்றும் ...................... ஆந் திகதியன்று அவரது மாதிரிக் கையொப்பத்தை எனது முன்னிலையில் வைத்தார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

மேலே 6 ஆம் பந்தியில் உத்தியோகத்தரின் தற்போதைய சேவை தொடர்பாக தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும் அவரின் பணிகளும் நடத்தையும் ................. என்றும் நான் உறுதிசெய்கின்றேன். இப்போது வகிக்கும் பதவியில் இருந்து அவர் விடுவிக்கப்பட முடியும்/முடியாது.

-----
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
(உத்தியோகபூர்வ இலச்சினை மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.)
திகதி :-----.

4-835

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.